வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No.: P. 1632

# ஈழநாடு வார மலர்

Eelanadu

விலை ரூ. 30/=




Email : news@eelanadu.lk | மலர் : 05 | 17.11.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 321 | பக்கங்கள் : 16

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்குவதற்கு நான் தயார்!

## சகல தமிழ்த் தேசிய கட்சிகளையும் ஒன்றிணைத்து செல்லவே விருப்பம்

### தேர்தல் வெற்றிக்கு பின்னர் சிறீதரன் எம்.பி.



யாழ்ப்பாணம், நவம்பர் 17

**"தற்போது உடைந்துபோயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்கம் செய்து அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளையும் ஒன்றிணைத்து செல்வதற்கு நான் இப்போதும் தயார். கடந்த பாராளுமன்ற தேர்தல் முடிவுகளும் அதனையே எமக்கு எடுத்துக் கூறுகின்றன."**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன்.

எமது சகோதர ஊடகமான டான் தொலைக்காட்சியில் இன்று இரவு ஒளிபரப்பாகும் ஸ்பொட்லைட் அரசியல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

15

# அரசியலில் இருந்து ஓய்வு பெறமாட்டேன்

### மகிந்த ராஜபக்ஷ உறுதி



கொழும்பு, நவ. 17

பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு கடும் பின்னடைவு ஏற்பட்டுள்ள நிலையில், அரசியலில் இருந்து ஒருபோதும் ஓய்வுப் பெறப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் இதனை குறிப்பிட்டார்.

15

# புதிய அமைச்சரவை நாளை நியமனம்?

கொழும்பு, நவ. 17

புதிய அரசாங்கத்தின் அமைச்சரவை நாளை திங்கட்கிழமை நியமிக்கப்பட உள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் சார்பில் அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- எதிர்வரும் 21ஆம் திகதி புதிய பாராளுமன்றம் கூடவுள்ளது. அதன் பின்னர் எமது பணிகள் விரைவாக தொடங்கப்படும்.

அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்பும்

15

# தேசியப் பட்டியல் எம்.பியாக மாவை?

யாழ்ப்பாணம், நவ. 17

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மாவை சேனாதிராசா நியமிக்கப்படலாம் என தெரியவருகின்றது.

கட்சியின் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராகத் தன்னை நியமிக்குமாறு கட்சியின் பதில் செயலாளர் பா.சத்தியலிங்கத்திடம், மாவை சேனாதிராசா எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி, ஒரு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமையை பெற்றிருந்தது.

15

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# முக்கிய புள்ளிகள் இருவர் மிகவிரைவில் கைதாகுவர்?

கொழும்பு, நவ. 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக முக்கிய புள்ளிகள் இருவர் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக கொழும்பு சிங்கள வார ஏடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த வார ஏட்டின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

19

# வடக்கு, கிழக்கு, மலையக தமிழரின் நம்பிக்கையை சிதைக்கமாட்டோம்!

### ரில்வின் சில்வா திட்டவட்டம்

கொழும்பு, நவ. 17

"வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்களும் எம்மீது நம்பிக்கை வைத்துள்ளனர். எமது தோழமையை ஏற்றுள்ளனர். அவர்களுக்கு நன்றிகள். நிச்சயம் அவர்களின் நம்பிக்கையை சிதைக்கமாட்டோம்." - என்று தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு -

15

# புதிய சபாநாயகராக பிமல் சபை முதல்வர் விஜித ஹேரத்

கொழும்பு, நவ. 17

பத்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

பிமல் ரத்நாயக்க தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியலை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்கு பிரவேசிக்க உள்ளார்.

பாராளுமன்றத்தில் சபைத் தலைவராக அமைச்சர் விஜித ஹேரத்தை நியமிக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் வரும்

15

# அரசுக்கு கிடைத்துள்ள வெற்றி சீர்திருத்தங்களுக்கான ஆணை

### எரிக் சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 17

பாராளுமன்றத் தேர்தலில், இலங்கை அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வெற்றி, ஆழமான சீர்திருத்தங்களுக்கான ஆணையை வழங்குவதாகவும், அதனை, அரசாங்கம் சரியாக பயன்படுத்த வேண்டும் எனவும், இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

15

உடனிருந்த அனைவருக்கும்

உள்ளார்ந்த நன்றிகள்...!

**நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில்,** தங்கள் வாக்குகளால் எனக்கு ஆணை வழங்கிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

கடந்த 15 வருடகால அரசியற் பயணத்தில் என் ஆத்மபலமாகவும், அரசியற் பலமாகவும் தம் உடனிருப்பை வழங்கி, கொள்கையின்பாற்பட்ட பயணத்தின் பங்குதாரர்களாக இருந்த உங்கள் ஒவ்வொருவரது கரங்களையும் நன்றியோடு பற்றிக்கொள்கிறேன்.

**என்னுள் நானாக இருந்து என்னை இயக்கும் எங்கள் தேசத்தில் விதையுண்ட ஆத்மாக்களின் அரூப பலத்தோடு, என் மக்களுக்கான தமிழ்த்தேசியப் பயணத்தை தடையற்றுத் தொடர்வேன்.**



"நிலையிழக்க வைத்த
அலைகளின் நடுவே
தமிழ்த்தேசியக் கொள்கைக்கு
கிடைத்த இந்த வெற்றி
கார்த்திகையின் கனதியை
உறுதி செய்யட்டும்"

என்றும் மக்கள் பணியில்,

சிவஞானம் சிறீதரன்.

**உண்மைகள் புனிதமானவை கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு முன் கொடுத்த வாக்குறுதியை சுமந்திரன் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்

## ஜனாதிபதி சட்டத்தரணி தவராசா வலியுறுத்தல்



யாழ்ப்பாணம், நவ. 17

**"இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனம் தொடர்பில் எம்.ஏ.சுமந்திரன் தேர்தலுக்கு முன்னர் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றிக் கொள்ள வேண்டும்"- இவ்வாறு ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா வலியுறுத்தியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"பொதுத் தேர்தலில் எம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 7 ஆயிரத்து 496 வாக்காளர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொதுத்தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் மிகக் குறுகிய காலத்திலேயே சனநாயக தமிழ் அரசுக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

வெறும் மூன்று வார அவகாசத்துக்குள் நாம் தேர்தலை எதிர்கொண்டோம். இந்த மூன்று வாரத்துக்குள் எம்மீது நம்பிக்கை வைத்து 7 ஆயிரத்து 496 பேர் வாக்களித்திருக்கின்றனர்.

உண்மையில் இதை நாம் பெரியதொரு அடைவாகக் கருதுகின்றோம்.

தமிழ்த் தேசியத்தின் பாதையில், தமிழ் மக்கள் இறுதி நம்பிக்கையாகப் பயணிக்க வேண்டும் என்றே எமது கட்சி உருவாக்கப்பட்டது.

அந்தத் தடம் மாறாத பாதையில் எங்களின் அரசியல் பயணம் தொடரும்.


தமிழ் அரசுக் கட்சிக்கு மக்கள் தக்க செய்தியொன்றை சொல்லியிருக்கின்றனர்.

தமிழ் அரசுக் கட்சியினர் மக்களின் ஆணையை ஏற்று அதன்படி நடக்க வேண்டும்.

சுமந்திரன் எனது நீண்டகால நண்பர். நன்கு பழக்கப்பட்டவர். அவர் கொடுத்த வாக்குறுதியை ஒருபோதும் மீறியதில்லை. தேர்தலுக்கு முன்பாக, வேட்பாளர்களாகப் போட்டியிட்டுத் தேர்தலில் தோல்வியடைபவர்களுக்கு தேசியப் பட்டியலில் இடமில்லை என்று அவர் கூறியிருந்தார்.

எனவே, தன் வாக்குறுதியை அவர் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்"- என்றார் தவராசா.

(எ)



# கசிப்பு உற்பத்தி நிலையத்தை சுற்றிவளைத்த பொலிஸார்!

## வட்டுக்கோட்டையில் வசமாக மாட்டிய இளைஞன்

யாழ்ப்பாணம், நவ. 17

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொன்னாலை தெற்கு, நெல்லியான் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் இடம் ஒன்று நேற்றுக் காலை வட்டுக்கோட்டை பொலிஸாரால் சுற்றிவளைப்பு செய்யப்பட்டது.

இதன்போது, 166 லீற்றர் கோடா, 10. 5 லீற்றர் கசிப்பு என்பவற்றுடன் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்திய இரண்டு பெரிய கொள்கலன்கள், இரண்டு சிறிய கொள்கலன்கள், இரண்டு செப்பு சுருள் என்பவற்றுடன் 21 வயதுடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி சி. ஐ. கொஸ்தாவின் கீழ் இயங்கும் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, கெட்டியாராச்சி, போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ். ஐ. ரத்நாயக்க உள்ளிட்ட பொலிஸ் குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

# ஒற்றையாட்சிக்கு எதிராக இப்போதும் தமிழ் மக்கள் உறுதியான நிலைப்பாடு

## டக்ளஸ், அங்கஜன் வாக்குகளே அநுர தரப்புக்கு சென்றது என்கிறார் சிவாஜி

யாழ்ப்பாணம், நவ. 17

ஒற்றையாட்சிக்கு எதிராகவே வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் வாக்களித்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு 80 ஆயிரம் வாக்குகள் மட்டுமே கிடைத்தன என்று தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் நாயகம் எம். கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

ஆனால், சமஷ்டியை வலியுறுத்தும் தமிழ்த் தரப்புகளுக்கு ஓர் இலட்சத்து 50 ஆயிரம் வாக்குகள் கிடைத்துள்ளன. ஈ. பி. டி. பி. மற்றும் அங்கஜன் போன்றோரின் வாக்குகளே அநுர தரப்புக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. அவர்களைத்தான் தமிழ் மக்கள் முற்றாக நிராகரித்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,




"நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தல் முடிவுகள் முழு நாட்டுக்கும் தமிழீழ மக்களுக்கும் பல செய்திகளை சொல்லியுள்ளது. தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்றுக்கொள்கின்றோம். தோல்விகள் - பின்னடைவுகள் எமக்குப் புதிதல்ல. மீண்டும் எழுந்து நிற்போம்.

தமிழ்த் தேசியத்தை எவரும் பேசக் கூடாது என்று அர்த்தமல்ல. தமிழ்த் தேசியம் தொடர்பில் அறிவுரை கூறும் யோக்கியதை அர்ச்சுனாவுக்கு இல்லை. மக்களின் தீர்ப்பின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினராக செயல்படுங்கள்.

மேலும், எங்களுக்கு நிதி நெருக்கடி உள்ளது தொடர்பில் பத்திரிகை செய்தி மூலம் அறிந்துகொண்ட உள்ளூர் மற்றும் புலம்பெயர் வாழ் தமிழர்கள் தங்களால் முடிந்த அளவு நிதி உதவிகளை செய்திருந்தனர்.

இவ்வாறு, நிதி உதவி வழங்கியமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியதுடன் மக்களுக்கு உழைக்க வேண்டும் என்ற உத்வேகத்தை ஏற்படுத்தியிருந்தது. தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என்பதே மக்கள் தீர்ப்பு. தமிழீழத்திலே சிங்கள இனவாத கட்சிகளின் ஆதிக்கத்தை தடுத்து நிறுத்த தமிழ்த் தேசிய கட்சிகள் அனைத்தும் ஓரணியாக வேண்டும்"- என்றார்.

(எ- 02)

# ஹாட்லியின் மைந்தர்களின் 25ஆம் ஆண்டு நினைவு நாள்

வடமராட்சி, நவ. 17

ஹாட்லியின் மைந்தர்களின் 25 ஆம் ஆண்டு நினைவு நாள் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்கரையில் அவர்களின் குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் இன்று ஞாயிற்றுக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கல்விச் செயல்பாட்டின் நிமித்தம் வடமராட்சி இன்பர்சிட்டி கடற்பகுதியில் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 17 ஆம் திகதி, கடல்வள ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தவேளை கடல் அலையில் சிக்குண்டு உயிரிழந்த யாழ். ஹாட்லி கல்லூரியின் 2000 ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்களான பூரணமூர்த்தி சுந்தர்வன், சிவநாதன் இரவிசங்கர், சுந்தரலிங்கம் சிவேரத்தினம் மற்றும் பாலகிருஷ்ணன் பிரதீபன் ஆகிய நான்கு பேரின் 25 ஆவது ஆண்டு மற்றும் பேராதனை பல்கலைக் கழகத்தில் பொறியியல் பீட மாணவனாக கல்வி கற்றுவந்த வேளை புகையிரத விபத்தில் சிக்கி உயிரிழந்த மரியரட்ணம் குணரட்னத்தின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் இன்று காலை 9 மணியளவில் நடைபெறவுள்ளது.

மாணவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்ப ர்கள் ஒன்றிணைந்து இந்த நினைவேந்தல் நிகழ்வை அனுஷ்டிக்கவுள்ளனர்.(எ-02)

# ஐந்து மாத ஆண் குழந்தை படுக்கையில் உயிரிழப்பு!

வடமராட்சி, நவ. 17

ஐந்து மாத ஆண் குழந்தை ஒன்று படுக்கையில் உயிரிழந்த சம்பவம் வடமராட்சி, பண்டாரியம்மன் கோவிலடி - தம்பசிட்டி பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

இவ்வாறு உயிரிழந்த குழந்தை அதே இடத்தைச் சேர்ந்த பிரசாத் பிரஜித் என்ற குழந்தையாகும். நேற்று முன்தினம் அதிகாலை குழந்தைக்கு பால் கொடுப்பதற்காக தாயார் பார்த்தபோது குழந்தை குளிர்ந்த நிலையில் காணப்பட்டதை அடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றபோது அங்கு குழந்தை இறந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

(எ- 02)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் குடிதண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம்


## முல்லை. அம்பகாமம் கிராமத்துக்கு வழங்கப்பட்டது

வடமராட்சி, நவ. 17

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள அம்பகாமம் கிராம மக்களின் பாவனைக்காக 7 லட்சத்து 88ஆயிரம் ரூபாய் பெறுமதியான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது.

இந்தக் கிராம மக்கள் நீண்ட காலம் எதிர்நோக்கி வந்த பாதுகாப்பான குடிநீர் இன்மை பிரச்னையை நிவர்த்தி செய்வதற்காக பாதுகாப்பான குடிநீர் தொகுதி பொருத்தப்பட்டு மக்களிடம் கையளிக்கும்



நிகழ்வு அம்பகாமம் துர்க்கா மகளிர் அமைப்பின் தலைவி தலைமை யில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் கலந்து கொண்டு குடிநீர் சுத்திகரிப்பு தொகுதியை திறந்து வைத்ததுடன் மக்களிடம் கையளித்தார்.

(எ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அணியாக ஒன்றிணைந்து பிரச்னைகளை கையாள்வோம்

## செல்வம் அடைக்கலநாதன் சொல்கிறார்



மன்னார், நவ. 17

**தமிழ் உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து பாராளுமன்றத்தில் ஓர் அணியாக பொதுப் பிரச்னைகளை கையாளுகின்ற வகையிலே செயல்பட நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவுசெய்யப்பட்ட செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**

மன்னாரில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“இனப்பிரச்னை குறித்தும், அபிவிருத்தி தொடர்பாகவும் கூடிய கவனம் செலுத்துவதாக கோரி மக்களிடம் நாங்கள் வாக்குச் சேகரித்தோம்.

இந்த இரு விடயங்கள் குறித்து அரசாங்கத்துடன் சேர்ந்து செயல்படுகின்ற ஒரு சாத்தியப்பாட்டை மேற்கொள்கின்ற சூழலை உருவாக்குவதாகவும் நாங்கள் கூறியிருந்தோம்.

குறித்த இரு விடயங்களிலும் நாங்கள் கூடுதல் கவனம் செலுத்துவோம்.

கிராமிய ரீதியாக மக்களின் குறைகளை கேட்டறிந்து கிராமங்களை முன்னேற்றுவதே எம் நோக்கமாக இருக்கும்.

மேலும், இனப்பிரச்னை தொடர்பான விடயங்களுக்கு நாங்கள் முன்னுரிமை கொடுத்துச் செயல்படுவதற்கான ஒரு சூழலை உருவாக்குவோம்.

ஜனாதிபதி அநுர கூறியது போல், தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்து, காணாமல் போனவர்கள் குறித்து அவர்களின் உறவுகள் போராட்டத்தின் ஊடாக நீதியை கோரி வருகின்றனர்.

அவர்களுக்கு நியாயம் கிடைக்கின்ற வகையில் ஒரு வழி முறையை நாங்கள் கையாளுகின்ற ஒரு சூழலை உருவாக்குதல், எமது நிலங்கள் பறிபோகாத ஒரு சூழலை ஏற்படுத்துதல், எமது மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

எனவே, இம்முறை சங்கு சின்னத்துக்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகள். மக்கள் சார்ந்த பிரச்னைகளை கவனத்தில் எடுத்து, மக்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கான முறையை நாங்கள் கையாளுவோம்”- என்றார். (எ)




# அரசியல் கட்சி அலுவலகம் மீது மட்டக்களப்பில் கடும் தாக்குதல்

மட்டக்களப்பு, நவ. 17

மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்சி அலுவலகமொன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட கடும் தாக்குதலால் அந்த அலுவலகம் பலத்த சேதத்துக்கு உள்ளானதாக காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பூநொச்சி முனை தாருஸ்ஸலாம் விளையாட்டு மைதான வீதியில் உள்ள மேற்படி தேர்தல் அலுவலகத்தின் மீது நள்ளிரவு அல்லது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாமென அலுவலகத்தின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட எம். ஐ. அப்துல் வஹ்ஹாப் என்பவருக்குச் சொந்தமான அலுவலகமே அடித்து நொறுக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் அலுவலகத்தின் கண்ணாடிகள் முற்றாக சேதமடைந்ததுடன், அங்கு கட்டப்பட்டிருந்த பதாதைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தாக்குதல் நடந்தபோது குறித்த அலுவலகத்தில் யாரும் இருக்கவில்லை.

இந்த நிலையில் தாக்குதல் சம்பவம் குறித்து காத்தான்குடி பொலிஸார் மேலதிகமான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பிரபல ஹோட்டலில் வைத்து ரஷ்ய பெண்மீது வன்புணர்வு

கொழும்பு, நவ. 17

அஹுங்கல்லவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் வைத்து ரஷ்ய பெண்ணொருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்படி, சந்தேகநபரை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

41 வயதுடைய ரஷ்ய பெண் ஒருவர் அஹுங்கல்லவில் உள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் நவம்பர் 8ஆம் திகதி வந்து தங்கியிருந்துள்ளார்.

வங்கி ஊழியரான குறித்த பெண்ணின் பிறந்த நாள் நவம்பர் 12ஆம் திகதியாகும்.

இந்த நிலையில், தனது பிறந்தநாள் தினத்தில் அதிகமாக மது அருந்தி கொண்டாடி விட்டு விடுதியின் அறையில் உறங்கச் சென்றுள்ளார்.

இதன்போது, தனது அறைக்கு வந்த ஒருவர் தன்னை வன்புணர்வு செய்ததாக அவர் கூறியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் குறித்த பெண் அஹுங்கல்ல பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரை அடையாளம் கண்டுள்ளனர்.

குறித்த ஹோட்டலில் பணிபுரியும் சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் கூறினர். (எ)

# ஜனாதிபதி அநுரவுக்கு பெரும் பொறுப்புள்ளது

## ரிஷாத் பதியுதீன் தெரிவிப்பு



வவுனியா, நவ. 17

வடக்கு - கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே, ஜனாதிபதிக்கு பெரும் பொறுப்பு இருக்கிறது என வன்னி மாவட்டத்திலிருந்து பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

தனது வெற்றி குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“வன்னி தேர்தல் மாவட்டத்தில் 06 பேர் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, தேசிய பட்டியல் ஆசனம் உட்பட இரண்டு ஆசனங்களைப் பெற்றுள்ளது. ஐக்கிய மக்கள் சக்தி ஓர் ஆசனத்தை பெற்றுள்ளது. இதே வேளை, மாவட்டத்தில் அதிகூடிய விருப்பு வாக்கை வன்னி மக்கள் எனக்கு வழங்கியுள்ளார்கள். எமது கட்சியில் போட்டியிட்ட அனைவரதும் அயராத முயற்சி தான் இந்த வெற்றிக்கு காரணம். மாவட்ட மக்களுக்கும் நன்றி கூறுகின்றோம்.

வன்னி மாவட்ட மக்களுக்கான பணியை நான் தொடர்ந்தும் முன்னெடுப்பேன். அதே போன்று, அம்பாறை மாவட்டத்தில் எமது கட்சி தனியாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளது. அந்த மக்களுக்கும் எனது நன்றிகள். புத்தளம், அநுராதபுரம், குருநாகல், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் எமது கட்சிக்கு மக்கள் வாக்களித்தாலும் வெல்ல முடியவில்லை. இருப்பினும் அந்த மக்களுக்கும் எனது நன்றிகள்.

தேர்தலுக்கு பின் எனது பணி முன்னர் செய்ததை விட அதிகமாக இருக்கும் என்பதை கூறிக் கொள்கின்றேன். இந்தத் தேர்தல் ஒரு புதிய செய்தியை சொல்லியிருக்கிறது. நாட்டு மக்கள் பெரும் எதிர்பார்ப்போடு ஜனாதிபதியையும் அவரின் தேசிய மக்கள் சக்தியையும் வெல்ல வைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மக்கள் கூட இந்த ஜனாதிபதியை சார்ந்த கட்சிக்கு வாக்களித்துள்ளார்கள். எனவே, அநுரவுக்கு ஒரு பெரும் பொறுப்பு இருக்கிறது. மக்கள் எதிர்பார்ப்புகளை அவர் நிறைவேற்றுவார் என்று நம்புகிறோம். அத்துடன் ஜனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும், புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்”- என்றார். (எ)

# மக்கள் எதிர்பார்க்கும் தேவைகளை அரசிடமிருந்து பெற்றுக்கொடுப்பேன்

## காதர் மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா, நவ. 17

மக்கள் எதிர்பார்க்கும் தேவைகளை அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக்கொடுப்பேன் என்று வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவாகியுள்ள காதர் மஸ்தான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

“புதிய கட்சியில் போட்டியிட்டு பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளேன். எமது புதிய சின்னத்தை மக்கள் மத்தியில் கொண்டு சென்றவர்களுக்கும், அதனை ஏற்றுக்கொண்டு வாக்களித்த வன்னி மாவட்ட மக்களுக்கும் எனது நன்றிகள்.

மக்கள் எதிர்பார்க்கும் தேவைகளை இந்த அரசாங்கத்திடம் இருந்து பெற்றுக் கொடுக்க என்னால் முடிந்த முயற்சிகளை எடுப்பேன். இந்த அரசாங்கத்தின் மீது மக்கள் எதிர்பார்த்து வாக்குகளை வாரி வழங்கியுள்ளனர்.

அதனடிப்படையில் வடக்கு, கிழக்கு மக்களது பிரச்னைகளை தீர்ப்பதற்கும், அவர்களது உரிமைகளை பெற்றுக் கொடுக்க தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அரசாங்கம் கொண்டு வரும் மக்கள் நலன் சார்ந்த திட்டங்களுக்கும் எனது முழு ஆதரவையும் வழங்குவேன் என உறுதியளிக்கின்றேன்” - என்றார். (எ)

# அரசியலில் இருந்து ஓய்வு மஹிந்தானந்த அறிவிப்பு

கண்டி, நவ. 17

அரசியலில் இருந்து ஓய்வு பெறவுள்ளதாக முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பொன்றை ஏற்பாடு செய்து அவர் இதனைக் கூறினார்.

“எனது சேவை கண்டி மாவட்ட மக்களுக்கு இனி தேவையில்லை என்பதை இம்முறை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் நிரூபித்துள்ளது.

அதனால் நான் அரசியலில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன்.

கண்டி மாவட்ட மக்களின் முடிவுக்கு தலைவணங்குகிறேன். இதன்படி, அரசியலில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன். என்னை அரசியலுக்கு அழைத்து வந்த அனைவருக்கும் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்”- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு முழுவதும் பொலிஸார் ரோந்து, தீவிர கண்காணிப்பு

## பொலிஸ் ஊடக பேச்சாளர் தகவல்

கொழும்பு, நவ. 17

**பாராளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான காலப் பகுதியில் நாடு முழுவதும் பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.**



தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு வாரத்துக்கு தேர்தலுக்கு பிந்தைய காலம் அமுலில் இருக்கும் என்றும் அவர் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "இப்போது தேர்தலுக்குப் பிந்தைய காலம் ஆரம்பித்துள்ளது.

ஒரு வார காலப்பகுதியில், பொது இடங்களில் எந்தவிதமான கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் பேரணியை நடத்த முடியாது.

எனவே, இந்தக் காலகட்டத்தில் பொலிஸார் முழு உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், நாடு முழுவதும் ரோந்துப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் தேவையான பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

புலனாய்வு அதிகாரிகள் பணியில் உள்ளனர்.

பிரத்தியேகமாக அடையாளம் காணப்பட்ட பொலிஸ் பிரிவுகளில் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது"- என்றார். (எ)

# ஒரே குடும்பத்தை சேர்ந்த இருவர் விபத்தில் மரணம்

கொழும்பு, நவ. 17

வெலிகம பொல்அத்த ரயில் கடவையில் சிறிய லொறி ஒன்று மாத்தறையில் இருந்து காலி நோக்கி பயணித்த ரயிலுடன் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உயிரிழந்தனர்.

விபத்தில் காயமடைந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய நால்வரும் மாத்தறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாகவும், அதில் ஒரு பெண்ணின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரயிலுக்கான சமிஞ்ஞை ஒளிரும் வேளையில் ரயில் வருவதாக அருகில் இருந்தவர்கள் எச்சரித்ததையும் மீறி லொறி ரயில் கடவையின் ஊடாக செல்ல முற்பட்ட போதே இவ்விபத்து இடம்பெற்றதாக வெலிகம பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் லொறியின் சாரதியான 34 வயதான நபரும் அவரது 80 வயதான தாத்தாவுமே உயிரிழந்தனர்

விபத்தில் உயிரிழந்த சாரதியின் 01 மற்றும் 07 வயதுடைய இரு பிள்ளைகள், அவரது மனைவி மற்றும் அவரது மனைவியின் தாயார் ஆகியோர் மாத்தறை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, மோட்டார் சைக்கிள் ஒன்று, மட்டக்களப்பில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உதயதேவி ரயிலுடன் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

ஹபரணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபரணை பெல்லங்கடவல கிளை வீதியில் இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின் ஆசனத்தில் பயணித்தவர் உயிரிழந்தார். (எ)

## தேசிய பட்டியல் மூலம்

# பாராளுமன்றம் செல்லும் நாமல்

கொழும்பு, நவ. 17

பாராளுமன்றத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய பட்டியல் உறுப்பினர் பதவிக்கு கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ பதவிப் பிரமாணம் செய்யவுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் இதனைத் தெரிவித்தார்.



"மக்கள் தந்த இந்த ஆணையை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எங்களிடம் மாவட்ட அளவில் 02 பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவியும் தேசியப் பட்டியலில் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் உள்ளது"- என்றும் அவர் கூறினார். (எ)

# தமிழர் பிரதிநிதித்துவம் தலைநகரில் இழப்பு!

கொழும்பு, நவ. 17

கொழும்பில் பாராளுமன்றத்துக்கான தமிழர் பிரிதிநித்துவம் இழக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பேஸ்புக்கில் பதிவொன்றை இட்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"தேர்தல் நடந்து முடிந்து விட்டது. வெற்றி பெற்ற அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள்! ஆட்சி அமைக்கும் அநுர அரசுக்கும் வாழ்த்துகள்!

நாட்டின் தேசிய தீர்மானங்கள் எடுக்கப்படுகின்ற நிகழ்வுகள் நடக்கும் கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், தமிழர் பிரதிநிதித்துவத்தை இரட்டிப்பு ஆக்க நமது கட்சி எடுத்து கொண்ட முயற்சி வெற்றி பெறவில்லை.

இன்றிலிருந்து ஒரு தமிழர் பிரதிநிதித்துவமும் இல்லாமல் போய் விட்டது.



பல இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஒவ்வொரு இனமும் தமது பிரதிநிதித்துவத்தை தக்க வைத்து கொள்வது, அதிகரிப்பது, இயல்பான ஜனநாயக செயல்பாடுகளாகும்.

ஆனால், கொழும்பு தலைநகர் மாவட்ட தமிழர் பிரதிநிதித்துவம் தொடர்பில் அது இன்று சாத்திய படவில்லை.

2010ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்து தமிழர் பிரதிநிதித்துவத்தை பெற நான் ஒரு கட்சி தலைவராக மேற்கொண்ட முயற்சியின் போது, இத்தகைய ஒரு "வெற்றி பெறாமை" என்ற சூழலை எதிர் கொண்டேன்.

பின்னர் நான் சாம்பலில் இருந்து எழுந்து வந்தேன். அது வரலாறு.

கொழும்பு தலைநகர் மாவட்டத்தில், இருந்த தமது இரண்டு பிரதிநிதித்துவங்களை தக்க வைத்து கொண்டு, இன்று அதை மூன்றாக அதிகரித்தும் கொண்ட, தமிழ் பேசும் சகோதர முஸ்லிம் உடன்பிறப்புகளுக்கு எனது இதயபூர்வ பாராட்டுகள்!

எமக்கு வாக்களித்த, வாக்களிக்காத அனைத்து வாக்காளர்களுக்கும் எனது நன்றிகள்"- இவ்வாறு மனோ கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் கொழும்பு மாவட்டத்தில் அதன் தலைவர் மனோ கணேசன் மற்றும் ஏ. ஆர். வி. லோஷன் ஆகியோர் தேர்தலில் போட்டியிட்ட போதும் அவர்களால் வெற்றி பெற முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# நியாயமான அரசியல் பயணத்தை முன்னெடுக்க எதிர்பார்க்கின்றேன்

## இம்ரான் மஹ்ரூப் தெரிவிப்பு

திருகோணமலை, நவ. 17

மக்கள் விரும்பும் தூய அரசியலை முன்னெடுப்பதற்கே எதிர்பார்க்கின்றேன்.

மாறாக வாக்குகளை விற்கவோ, சொந்த இலாபத்துக்காக பயன்படுத்தவோ, ஊழல் - மோசடி அரசியலை முன்னெடுக்கவோ மாட்டேன் என்று ஐக்கிய மக்கள் சக்தியில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் வைத்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"மக்கள் எதிர்பார்த்த உண்மை, நீதி நியாயமான - தூய்மையான அரசியல் பயணத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

மக்கள் எதிர்பார்ப்பு மூலமாக சரியாக தங்களது உறுப்பினர்களை தெரிவு செய்துள்ளார்கள். இதன் மூலம் ஊழலற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க வேண்டும் என்ற




தீர்மானத்தை மக்கள் எடுத்துள்ளார்கள் .

மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வேண்டும். உரிமைகள், அபிவிருத்தி விடயங்களில் மக்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்து செய்ய வேண்டிய வேலைகளை செய்து மக்கள் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் .

மூதூர் தொகுதியில் ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளது. இருப்பினும் இங்கு கடந்த காலங்களில் இரு உறுப்பினர்களை பெற்ற நிலையில் தற்போது ஓர் ஆசனத்தையே பெற்றுள்ளோம். எனவே, வாக்களித்த திருகோணமலை மாவட்ட மக்களுக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்"- என்றார். (எ)

# மக்களின் காவலனாக இருப்பேன்

## கோடீஸ்வரன் கூறுகிறார்



காரைதீவு, நவ. 17

"அம்பாறை மாவட்டத்தில் வலுவிழந்து இருக்கின்ற மக்களின் காவலனாக இருப்பேன் என்று வாக்குறுதி வழங்குகின்றேன்"- இவ்வாறு இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் போட்டியிட்டு தெரிவான கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதியாக தெரிவாகிய பின் காரைதீவு சிறீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை இரவு வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை - திகாமடுல்ல மாவட்ட தமிழ்ப் பாராளுமன்ற பிரதிநிதியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான என்னை தெரிவு செய்த மக்களுக்கு நன்றிகள். பாராளுமன்றத் தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் தமிழ் அரசுக் கட்சி சார்பாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறுவதற்கு பெரும் பாடுபட்டுள்ளதை நான் அறிவேன். இந்தத் தேர்தல் பிரசாரத்துக்கு மக்கள் வழங்கிய பேராதரவுக்கு மிக்க நன்றிகள். எனவே, வலுவிழந்து இருக்கின்ற மக்களின் காவலனாக தொடர்ந்தும் இருப்பேன்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
17.11.2024 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், கார்த்திகை 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழரசின் எதிர்காலமும் சிறீதரன், சுமந்திரனின் பொறுப்பும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் இருந்து இந்தத் தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களில் தனியொரு கட்சியைச் சேர்ந்த கூடுதல் எண்ணிக்கையானவர்கள் என்றால் அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களே.

தேசிய கட்சிகளைச் சேர்ந்தவர்கள் முன்னரும் இரு மாகாணங்களில் இருந்தும் பாராளுமன்றத்துக்கு தெரிவாகினார்கள். ஆனால், இந்த தடவை நடந்திருப்பதைப் போன்று ஒரு தேசிய கட்சி அதுவும் ஓர் இடதுசாரிக்கட்சி தமிழ்பேசும் மக்களை பாரம்பரியமாக பிரதிநிதித்துவம் செய்துவந்த அரசியல் கட்சிகளை இவ்வாறாக தோற்கடித்ததில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆறு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்களை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியவாத கட்சிகளினால் ஒவ்வோர் ஆசனத்துக்கு மேல் பெறமுடியாமல் போகிற அளவுக்கு அவற்றை பின்தள்ளியிருக்கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தை தவிர ஏனைய நான்கு மாவட்டங்களிலும் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றிய முன்னிலைக் கட்சியாக தேசிய மக்கள் சக்தி சாதனை படைத்திருக்கிறது.

இந்த அரசியல் கோல மாற்றத்துக்கு உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான காலப்பகுதியில் தமிழ்க்கட்சிகளின் செயல்பாடுகளில் மக்களுக்கு ஏற்பட்ட விரக்தியும் வெறுப்பும் காரணமா அல்லது ஜனாதிபதி திஸநாயக்கவினதும் அவரது கட்சியினதும் கொள்கைகள் மீதான ஈர்ப்பு காரணமா? தமிழ் மக்கள் வாக்களித்த முறையை தமிழ்க் கட்சிகளும் தேசிய மக்கள் சக்தியும் எவ்வாறு வியாக்கியானப்படுத்துகின்றன என்பது அறிந்து கொள்ளவேண்டிய முக்கியமான விடயமாகும்.

இரு மாகாணங்களிலும் தங்களுக்கு எட்டு ஆசனங்கள் கிடைத்ததை ஒரு வெற்றியாக இலங்கை தமிழ் அரசு கட்சியின் சில தலைவர்கள் பெருமைப்படுகிறார்கள். முன்னைய பாராளுமன்றத்தில் தங்களுக்கு இருந்த ஆறு ஆசனங்களையும் விட இரு ஆசனங்களை கூடுலாக தந்து தமிழ் மக்கள் தங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரசியல் இயக்கமாக மீண்டும் அங்கீகாரத்தை வழங்கியிருப்பதாகவும் அந்த தலைவர்கள் தர்க்க நியாயம் செய்கிறார்கள்.

ஆனால், தமிழ் அரசுக் கட்சி பெற்றிருக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை குறித்து பெருமைப்படுவதையும் விட தேசிய மக்கள் சக்தியினால் இரு மாகாணங்களிலும் தமிழ்க் கட்சிகளை பின்தள்ளி எவ்வாறு கூடுதலான ஆசனங்களைக் கைப்பற்றக்கூடியதாக இருந்தது என்பதை பற்றி சிந்தித்துப் பார்க்க வேண்டியதே முக்கியமானதாகும். கடந்த காலம் குறித்து சுயபரிசோதனை செய்வதில் ஒருபோதும் அக்கறை காட்டாத தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தற்போதைய நிலைவரம் குறித்தாவது ஆழ்ந்து சிந்திப்பார்கள் என்று எதிர்பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான அரசியல் கட்சியாக - எட்டு ஆசனங்களுடன் என்றாலும் - விளங்கும் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் அதன் எதிர்காலம் குறித்து ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் அரசுக் கட்சி அதன் வரலாற்றில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு உட்பூசல்களினால் சீர்குலைந்து கிடக்கிறது. பாரம்பரியமாக அதன் கோட்டையாக விளக்கிய யாழ்ப்பாண மாவட்டமே கைவிட்டுப் போயிருக்கிறது. இவ்வருட முற்பகுதியில் திருகோணமலையில் நடைபெற்ற தலைவர் தேர்தலுக்கு பிறகு கட்சி உள்ளுக்குள் எத்தனை முகாம்களாக இருக்கிறதோ தெரியாது. ஆனால் வெளிப்படையாக இரு முகாம்களாக பிளவுபட்டு நிற்கிறது.

கடந்த பதினைந்து வருடங்களாக பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்து வந்த மதியாபரணம் சுமந்திரனும் சிவஞானம் சிறீதரனுமே அந்த எதிரெதிர் முகாம்களின் "தளபதிகள்". சுமந்திரனால் இந்த தடவை பாராளுமன்றத்துக்கு தெரிவாக முடியவில்லை. அதேவேளை அவர் தெரிவாகாமல் போனதும் யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ் அரசுக் கட்சியின் ஒரேயொரு பாராளுமன்ற உறுப்பினராக கூடுதல் விருப்பு வாக்குகளுடன் தான் தெரிவானதும் இன்றைய தமிழர் அரசியலின் கோலங்களுக்கு மத்தியில் சிறீதரன் பெரிதாகப் பெருமைப் படக்கூடிய அம்சங்கள் அல்ல.

தமிழ் அரசு கட்சிக்குள் நிலவும் முரண்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவர இணக்கப்போக்கை கடைப்பிடிப்பதிலும் தலைமைத்துவத் தகராறை முடிவுக்கு கொண்டுவருவதிலும் சிறீதரன் அக்கறை காட்ட வேண்டிய நேரம் வந்துவிட்டது. நீதிமன்றங்களில் நிலுவையில் இருக்கும் வழக்குகளை விலக்கிக்கொள்ளச் செய்து கட்சியின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்பதற்கான வழிமுறைகளை அவர் கடைப்பிடிக்கவேண்டும்.

தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத்துக்கு தெரிவானவர்களில் அனுபவம் கூடியவர் என்ற முறையில் அதன் பாராளுமன்றக் குழுவின் தலைவராக பதவியேற்று தனது தலைமைத்துவ ஆளுமையை சீறீதரன் நிரூபிக்க வேண்டும். சிந்தித்துச் செயல்படாவிட்டால் எதிர்காலத் தேர்தல்களில் பாதிப்பு மேலும் மோசமாகலாம். சுமந்திரனும் இது விடயத்தில் தனது பக்குவத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம்.

### வடமாகாண மரநடுகை மாதம்
### கார்த்திகை - 2024



"மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை."
- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)

# கண்காணிப்பாளர்கள் இறுதி அறிக்கை

கொழும்பு, நவ17
நாடாளுமன்றத் தேர்தலை கண்காணிப்பதற்காக, தேர்தல்கள் ஆணைக் குழுவின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள், இறுதி அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர்.

இது தொடர்பான அறிக்கை, தேர்தல் ஆணைக் குழு வளாகத்தில், தேர்தல் ஆணைக்குழுவிடம் கையளிக் கப்பட்டது.

தேர்தல்கள் ஆணைக் குழுவின் அழைப்பின்பேரில், 10 வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் குழுவினர், தேர்தலை கண்காணிப்பதற்காக வருகை தந்திருந்தனர்.

தேர்தலுக்கு முந்தைய காலம், தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய காலப் பகுதியில், தங்கள் அவதானிப்புகளை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். (அ)

# ரயில் கடவைகள் தொடர்பில் மக்கள் அவதானம்

கொழும்பு , நவ17
ரயில் கடவைகளில் பயணிக்கும் போது, மக்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என, ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே.இந்திபொல தெரிவித்துள்ளார்.

கவனக்குறைவாக ரயில் கடவைகளில் பயணிப்பதால், அதிகளவான விபத்துக்கள் ஏற்படுகின்றன.

அதனால், ரயில் கடவைகளை கடக்கும் போது, வாகன சாரதிகள் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும்.

என ரயில்வே திணைக்களத்தின் பிரதிப் பொது முகாமையாளர் என்.ஜே. இந்திபொல குறிப்பிட்டுள்ளார். (அ)

# 21ஆம் திகதி, ஜனாதிபதி கொள்கைப் பிரகடன உரை

கொழும்பு, நவ 17
எதிர்வரும் 21 ஆம் திகதி, 10 ஆவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வை ஆரம்பித்து வைக்கவுள்ள ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, அன்றையதினம், புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார்.

அதற்கமைய, அன்றைய தினம் பிற்பகல் 3.00 மணிக்கு, வைபவ ரீதியாக முதலாவது அமர்வு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன், அரசியலமைப்பின் 33 உறுப்புரையின் கீழ், ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கு அமைய, ஜனாதிபதி, புதிய அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை நிகழ்த்தவுள்ளார். (அ)

# புதிய எம்.பிக்களுக்கு செயலமர்வு!

கொழும்பு நவ. 17
10வது நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கை நாளை முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. நாளை முதல் இணையவழி முறைமை ஊடாக புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மை பதிவு செய்து கொள்ளலாம் என நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.


சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு தேவையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக எதிர்வரும் 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் இரண்டு தகவல் சாளரங்களை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நாடாளுமன்ற மரபு மற்றும் நாடாளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 03 நாள் செயலமர்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

25, 26, 27 ஆகிய திகதிகளில் செயலமர்வு நடைபெறுகிறது. இது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு இன்று வெளியிடப்பட உள்ளது.

புதிய நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21ம் திகதி காலை 10 மணிக்கு கூடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொய் என்னும் தந்திரம்!

ராதாகிருஷ்ணன்


மகாத்மா காந்தி தனது குழந்தைப் பருவத்தில் அரிச்சந்திர புராண நாடகத்தைப் பார்த்தார். அரிச்சந்திரனின் வாய்மை தவறாத பண்பு அவரைக் கவர்ந்தது. சத்தியத்தின் மீது அரிச்சந்திரன் கொண்டிருக்கும் பற்று, எல்லா துன்பங்களையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை அளித்ததைக் கண்டு அவர் வியப்படைந்தார். தன் வாழ்நாளில் பொய்யே பேசக் கூடாது, 'சத்தியமே தனக்குரிய வழி' என அக்கணத்தில் காந்திஜி முடிவெடுத்தார்.

இந்நிகழ்வே, சாதாரண பள்ளிச் சிறுவனாகயிருந்த மோகன்தாஸ் கரம்சந்த் காந்தியை அண்ணலாக, மகாத்மாவாக மாற்றும் முதல் படியானது. ஆங்கிலேயர்களின் பிடியிலிருந்து இந்தியாவை மீட்டுடெடுக்க, அவர் வாய்மையையே தன் தாரக மந்திரமாகக் கொண்டிருந்தார். அது வேறு ஓர் யுகத்தின் வாழ்வியல்!

நெஞ்சறிந்து பொய்யுரைக்க எவரும் துணிந்திடார் என்றாலும், இன்று சிலர் வாய்மையிலிருந்து விலகி, தான் நலம் பெற 'பொய்' எனும் தந்திரத்தையே ஆயுதமாகக் கொண்டு களமாடி வருவதால், பல பிரச்னைகள் ஏற்படுகின்றன. ஒருவர் கூறும் பொய்யானது, தனது மகிழ்ச்சிக்காகவோ, தான் செய்த தவறை மறைப்பதற்காகவோ, பிறரைத் துன்பப்படுத்தி, அவர் மகிழ்ச்சியைக் கெடுக்கவோ, ஒருவரை வஞ்சனையின் வலையில் சிக்க வைக்க வேண்டும் என்பதற்காகவோ பல நேரங்களில் சிலரால் பயன்படுத்தப்படுகிறது.

அவர் சொல்லும் பொய், அப்போதைக்கு வேண்டுமானால் மகிழ்ச்சியளிப்பதாக இருக்கலாம், தற்காலிகமாக தப்ப வைக்கலாம். ஆனால், அந்தப் பொய்யைச் சொன்னவரிடமே திரும்பி வந்து அவரைத் தாக்கும். இது பொய் சொன்னவரின் மகிழ்ச்சியையும், மனநலத்தையும், உடல் நலத்தையும், மன அமைதியையும் மிகவும் பாதிப்பதோடு, அவரின் மதிப்பையும், மதியையும் இழக்கச் செய்யும்.

ஒருவரின் தனிப்பட்ட வாழ்விலோ அல்லது தொழில் முறையிலோ ஒருவர் தன்னை நல்லவர் போல் காட்டிக் கொள்ள உதவும் பல்வேறு தந்திரங்களில், பொய்யைப் போல மகிழ்ச்சியைக் கெடுக்கும் உபாயம் வேறெதுவும் இல்லை. வீட்டில் பெரியவர்கள் பொய் சொன்னால் அந்த வீட்டிலுள்ள உறுப்பினர்கள் அனைவரையும் பாதிப்படைய செய்து குடும்ப அமைதியையே கெடுக்கும். வீடுகள் அமைதியாக இருந்தால்தானே வீதிகளும் அமைதியாக இருக்கும்?



தான் தவறு செய்துள்ளதை அறியும்போது ஏற்படும் குற்றவுணர்வு, இழிவுணர்வு, 'நாம் அகப்பட்டுக் கொள்வோம்' என்ற கவலையுணர்வு ஏற்படும்போது, தனது நிலையை மறைக்க மனிதன் பொய் சொல்கிறான். சொல்லும் பொய்யை, உண்மை என நிலைநிறுத்த அவன் செய்யும் பல்வேறு உபாயங்கள் தீவிரம் மிக்கதாக இருக்கும். இதனால், நட்பும், உறவும் பகையாகும். சொன்ன பொய்யை மறைக்க மீண்டும் மீண்டும் பல பொய்களைக் கூறி சுழலில் சிக்குகிறான். ஒரு பொய் பல பொய்களை உருவாக்கும். அதற்கு உண்மையையே சொல்லிவிட்டு, மனம் தெளிந்து நகர்ந்துவிடலாம்.

பொய் சொல்வதையே வழக்கமாகக் கொண்டிருப்பவரிடம் அமைதியின்மையுடன், முரண்பட்ட கருத்துகளும் தோன்றும். அவரின் சுயஉணர்வும், சொல்லும், செயலும், நம்பிக்கையும், பழக்கவழக்கங்களும் ஒரே நேர்க்கோட்டில் பயணிக்காது.

நம்பகத்தன்மையுடன் வாழ்வதிலிருந்துதான் உண்மையான மகிழ்ச்சி உருவாகிறது. 'வாழ்வில் எதை அரிதாக நினைத்தீர்களோ அதைக்கூட நீங்கள் இழந்திருக்கலாம் ஆனாலும், மனசாட்சியின் குரலுக்குப் பணியுங்கள்' என்றார் காந்திஜி.

ஒருவரைப் பற்றி பெருமையாகப் பேசுவது, சிறுமையாகப் பேசுவது என்கிற இரண்டையும் விட, உண்மையாகப் பேசுவதுதான் உயர்வானது. அதனால்தான் உயர்வானவை எல்லாம் உண்மையாக உள்ளன. உண்மை நன்மைக்கு வழிகாட்டும். பொய் தீமைக்கு வழி வகுக்கும். உண்மையை நேசிக்கக் கூடிய வீடும், சமூகமும் நாடும் உயர்வு பெறும். உண்மைதான் நேர்வழியைக் காட்டும் என்பதால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு உண்மையே பேச வேண்டும் என குழந்தைப் பருவத்திலிருந்தே சத்தியத்தின் மகத்துவத்தை எடுத்துரைத்துப் பழக்க வேண்டும்.

ஒருவர் பொய் சொல்வதையே தொடர்ந்து வழக்கமாக்கிக் கொண்டு வாழ்க்கையில் பயணிக்கிறார் என்றால், அவர் நேர்மையில்லாமல் நடந்து கொள்கிறார் என்பதை நாம் உணர்ந்து கொண்டு அவரிடமிருந்து விலகியே இருக்க வேண்டும்.

ஒருவரின் உண்மையான மகிழ்ச்சி என்பதானது பிறர் நம் மீது காட்டும் நம்பகத்தன்மையுடனும், தனக்குத் தானே உண்மையாக இருப்பதுடனும், பிறர் நலனில் காட்டும் நமது அர்த்தமுள்ள பங்களிப்புகளிலும்தான் துளிர்விடுகிறது. ஆனால், நாம் சொல்லும் பொய்யானது மனிதனது இந்த நற்பண்புகள் அனைத்தையும் ஒருங்கே அழித்துவிடும்.

நாம் எப்போதும் உண்மையே பேசும் மன உறுதியை கொண்டவராக இருந்தால், எப்போதும் எந்த சூழ்நிலையிலும் பிறருக்குத் தீமை தருகின்ற செயலைச் செய்ய அஞ்சுவோம். இதனால் ஒருவரின் சுயமரியாதை மேம்படுத்துவதுடன், மற்றவர் நம் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கீற்று நம் மீது வீசி நம்மை அனைத்து நிலைகளிலும் ஒளிரச் செய்யும். எனவே தான், 'உண்மை என்பது உயர்ந்து. ஆயின், உண்மை நடத்தை அதனினும் உயர்ந்தது' என்கிறார் குருநானக்.

## இந்தவார ராசிபலன் 17.11.2024 - 23.11.2024

ஞாயிற்றுக்கிழமை

குரோதி வருடம் - கார்த்திகை 02

நல்ல நேரம்: 09.08 - 10.38 ராகு காலம் : 04.38 - 06.08 திதி : துதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த மாணவர்கள் தெளிவான அறிவியல் பாடங்களைச் சுலபமாக கிரகித்துக் கொள்வர். மனைவியிடம் மட்டுமல்லாமல் நண்பர், மற்றும் உறவுகளிடம் கருத்து முரண்பாடுகளை தவிர்த்தால் நிம்மதி பிறக்கும். பெண்களால் முழுமையாக சந்தோஷம் இருக்கும். வாகனங்களில் எச்சரிக்கையுடன் செல்லவும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரித்து, உங்கள் மனம் உயர்ந்த எண்ணங்களை கொண்டதாக அமையும். பணவரவு அதிகரிப்பது போல் இருந்தாலும், அதற்கேற்ற செலவுகளும் வாசல் வந்து நிற்கும். மனக்கவலைகள் குறையும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் நெடுநாட்களாக பெண் தேடி அலைந்தவர்களுக்குத் திருமணம் உறுதியாகி, அதன் காரணமாக மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதப்பார்கள். வாலிபர்கள் தோழர், தோழிகளுடன் பார்ட்டிகளுக்கு சென்று மகிழ்வீர்கள். மற்றவர்கள் பாராட்ட வேண்டும் என்பதற்காகவே, மற்றவர்களின் வேலையையும் தானாக முன்வந்து பொறுப்போடு செய்வார்கள். உண்மை உழைப்பு காரணமாக பணியிடத்தில் உயர் அதிகாரிகளின் பாராட்டைப் பெறுவார்கள். தொழில் வகையில் எதிர்பார்த்த இலாபங்கள் இல்லை என்றாலும் ஓரளவு சமாளித்து விடுவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் நண்பர்களுடன் மால்களுக்கு சென்று, மனமகிழ்ச்சி பெருக, உண்டு மகிழ்ந்து உல்லாசம் அடைவீர்கள். உறவுகளின் இல்ல விருந்து உபசாரங்களும் கலந்து கொள்ளும் போது மனதில் ஒரு திருப்தி ஏற்படும். வீட்டில் திருமணம் போன்ற மகிழ்ச்சி கரமான சுப நிகழ்ச்சிகள் நடைபெற்று சுப விரயங்கள் அதிகரிக்கும். எறும்பு போன்ற உங்கள் வேகமான, சுறுசுறுப்பு மிக்க பணி திறமைகளை வெளிக்காட்டி அதிகாரிகள், அன்பையும், பாராட்டையும் பெறுவீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவு தாராளமாக இருக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் உங்கள் வாழ்க்கைப் பாதையில் வசந்த மலர்கள் பூக்க தெய்வ வழிபாடு மற்றும் தெய்வீக கருத்துக்களைக் கேட்பது நல்லது. அதன் காரணமாக கவலைகள் மறைந்து, மனதில் ஓர் ஏகாந்தமான அமைதி நிலவும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பண வருமானம் தாராளமாக இருக்கும். உற்றார், உறவினர் வருகையால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். வீண்பழி, உறவுகள் மத்தியில் வார்த்தைகளை அளந்து பேசுவது நல்லது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாக்குவன்மை ஓங்கும். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். உங்கள் தோற்றத்தில் புதிய பொலிவு ஏற்படும். சுற்றுவட்டாரத்தில் பெயரும், புகழும் ஓங்கும். படிப்பில் தீவிர முயற்சியின் காரணமாக அறிவுத்திறன் கூடும். சிலர் போலி கம்பெனிகள் நம்பி முதலீடு செய்து, பண விஷயங்களில் ஏமாறலாம். எச்சரிக்கை தேவை.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரத் உடன்பிறப்புகள் நன்மைகள் உண்டு. குடும்பத்தில் சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும். திடீர் பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அதிகாரம் மிக்க தலைமை பதவிகள் தேடி வரும். வீரம் பெருகும். தங்கள் சேவைகள் அங்கீகரிக்கப்பட்டு, புகழும் ஓங்கும். உங்கள் உயர்வைக் கண்டு பிறர் பொறாமை கொள்வர். சிலருக்கு வெப்ப சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். அளவோடு உணவு அருந்துவது நல்லது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பாராத தன வரவுகள் கைக்கு வந்து சேரும். அதற்குத் தக்க செலவுகளும் கூடும். கேளிக்கை, பிறந்தநாள் விருந்துகள் எனச் செலவுகளோடு, மகிழ்ச்சி பொங்கும் வாரமாக இருக்கும். அரசு உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு புது பதவிகளும் அதனால் சம்பள உயர்வு ஏற்படும். வியாபாரம் சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்களில் ஆதாயங்கள் ஏற்படும். கலைஞர்களுக்குப் புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். பிரபலமானவர்களின் நட்பால் உங்களுக்கு வேண்டியதை சாதித்துக் கொள்வீர்கள்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் எதிர்பாராத பயணங்களால் ஆதாயம் ஏற்படலாம். பழைய கடன்களை அடைக்க புதிய கடன்கள் வாங்க நேரலாம். இடைவிடாத பணி காரணமாக நேரத்திற்கு உணவு உண்ண இயலாமல் போகும். புதிய தொழில் தொடங்க, எதிர்பார்த்தபடி அரசு உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். பெரிய மனிதர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் ஆதரவால் நினைத்த காரியங்கள் முடிவடையும். சில நேரங்களில் சுறுசுறுப்பற்ற நிலை நிலவும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் செல்வத்திற்கு அதிபதியான அலைமகளே உங்களைப் பார்த்துச் சிரித்தால் நீங்கள் மகிழ மாட்டீர்களா ? தன வருவாய் திருப்திகரமாக இருக்கும். விவசாயிகளுக்கு விளைச்சல் அதிகரித்து, ஓரளவு இலாபமும் அதிகரிக்கும். அரசு உயர் அதிகாரிகளின் சிபாரிசால் பல நாட்கள் தள்ளிப் போன, அதிகாரம் மிக்க பதவிக்கு பதவி உயர்வு கிடைக்கும். உங்கள் சிறந்த பணிக்காக மேலதிகாரிகளால் பாராட்டப்படுவீர்கள்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் திருமண வயது வந்தும், திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கான முயற்சிகள் பெற்றோர்களால் மேற்கொள்ளப்படும். நல்ல விஷயங்களுக்காக அலைச்சல்கள் ஏற்படும். தேவையற்ற நெடுந்தூரப் பயணங்கள் மேற்கொள்ள நேர்ந்தாலும், அதில் இலாபம் ஏற்படும். அரசு ஊழியர்களுக்கு அவர்கள் இடும் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். புத்திர பாக்கியம் ஏற்படும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


இந்த வாரம் தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும். உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும். தூர பயணங்களில் எச்சரிக்கை தேவை. அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். புதிய தொழில் தொடர்புகள் வணிக நிலை எதிர்பார்த்தபடி உயரும். உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்கள் கவனமாக படிப்பது நல்லது.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் பண விஷயத்தைப் பொறுத்தவரை வரவுகள் அதிகமாக திருப்திகரமான வாரமாக இருக்கும். நீண்ட நாளாக வராத கடன் பாக்கிகள் வசூலாகும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தார் மூலம் உதவிகள் தடைப்படாது. தொழில் தொடர்பாக எடுத்த புதிய முயற்சிகள் யாவும் வெற்றி அடைய கடின உழைப்பு தேவைப்படும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்பட்டு மகிழ் உண்டாகும். புதிய உயர்தரமான வாகன வசதிகள் அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். தெய்வப் பிரார்த்தனையால் பெண்களின் வேண்டுதல்கள் நிறைவேற, வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேசிய மக்கள் சக்தி சாதித்துக்காட்டிய வரலாற்று முக்கியத்துவ தேர்தல் வெற்றி





வீரகத்தி தனபாலசிங்கம்

பாராளுமன்ற தேர்தலில் அநுர குமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரமாண்டமான வெற்றியைப் பெற்று சாதனை படைத்திருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்தன தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி 1977 ஜூலை பொதுத்தேர்தலில் பாராளுமன்றத்தின் 168 ஆசனங்களில் 144 ஆசனங்களை கைப்பற்றி ஆறில் ஐந்து பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த பிறகு முதற்தடவையாக அதேபோன்ற ஒரு பிரமாண்டமான பெரும்பான்மையுடன் இந்த தடவை தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்திருக்கிறது.

ஐக்கிய தேசிய கட்சி அந்த அத்தகைய ஒரு வெற்றியை பெற்றபோது பழைய தொகுதி அடிப்படையி லான தேர்தல் முறையே நடைமுறையில் இருந்தது. ஆனால், விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை முழுமையாக எந்தவொரு அரசியல் கட்சியுமே இதுவரை பெற்றிராத நிலையில், தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலதிக மான ஆசனங்களுடன் மக்களின் ஆணையை பெற்றிருக்கிறது.

மகிந்த ராஜபக்ச ஆட்சியில் 2010 ஆண்டிலும் கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் 2020 ஆம் ஆண்டிலும் அவர்களின் கட்சிகளின் தலைமையிலான கூட்டணிகளுக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தது. ஆனால் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் குறைவான பாராளுமன்ற ஆசனங்களை தேர்தல்களில் பெற்ற அவர்கள் பிறகு கட்சித் தாவல்களை ஊக்குவித்து அந்த பெரும்பான்மையை உறுதி செய்து கொண்டார்கள். ஆனால், தேசிய மக்கள் சக்தி தனியாக இந்த தடவை தேர்தலில் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கும் அதிக மான ஆசனங்களைக் கைப்பற்றி சாதித்துக் காட்டியிருக்கிறது.

பாராளுமன்றத்தை தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களினால் நிரப்புமாறு தேர்தல் பிரசாரங்களின் தொடக்கத்தில் மக்களிடம் கேட்டுக் கொண்ட ஜனாதிபதி திசாநாயக்கவும் அமைச்சர் விஜித ஹேரத்தும் சபையில் எதிர்க் கட்சியே தேவையில்லை என்று கூறினார்கள். ஆனால் அதற்கு அரசியல் கட்சிகளிடம் இருந்து கடுமையான எதிர்ப்பு கிளம்பியது.

பிறகு தேர்தல் பிரசாரங்களின் இறுதிக் கட்டங்களில் தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) வேறு தலைவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருந்த கடந்த கால அரசாங்கங்கள் எதேச்சாதிகாரமாக நடந்து கொண்டதை சுட்டிக்காட்டி தங்களுக்கு அத்தகைய பெரும்பான்மை தேவையில்லை என்றும் ஒழுங்கான முறையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு உறுதியான பெரும்பான்மையை தந்தால் போதும் என்றும் கூறினார்கள். ஆனால் அவர்களின் வேண்டுகோளை மீறி மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு பிரமாண்டமான பெரும்பான்மையுடன் ஆணையைக் கொடுத்திருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டவர்கள் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் என்றும் அவர்களினால் பொருளாதார விவகாரங்களை கையாளமுடியாது என்பதால் தங்களது அணிகளைச் சேர்ந்தவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்புமாறு ரணில் விக்கிரமசிங்கவும் சஜித் பிரேமதாசவும் மக்களிடம் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். ஆனால், மக்கள் அதை அறவே பொருட்படுத் தாமல் தேசிய மக்களே சக்தியின் வேட்பாளர்களினால் பாராளுமன்றத்தை பெருமளவுக்கு நிரப்பியிருக்கிறார்கள்.

ஜனாதிபதி திசாநாயக்கவின் ஆட்சித் திறன் தொடர்பில் எதிர்க்கட்சிகள் கிளப்பிய சந்தேகங்களை எல்லாம் நிராகரித்த மக்கள் அவர் மீதும் அவரது கட்சி மீதும் வியக்கத்தக்க முறையில் மீண்டும் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தி புதிய அரசாங்கத்தை அமைக்கவிருக்கும் இந்த சந்தர்ப்பம் தெற்காசியாவில் நேபாளத்துக்கு அடுத்ததாக அரச அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஆயுதக்கிளர்ச்சியை முன்னெடுத்த இடதுசாரி அரசியல் இயக்கம் ஒன்று பாராளுமன்றத்தின் மூலமாக ஆட்சிக்கு வருகின்ற ஒரு வரலாற்று முக்கியத்துவமுடைய நிகழ்வைக் குறித்து நிற்கிறது.

கடந்த நூற்றாண்டில் ஒரு மூன்று தசாப்தகால இடைவெளியில் இரு ஆயுதக்கிளர்ச்சிகளை முன்னெடுத்து தோல்வி கண்ட ஜே.வி.பி. ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து மூன்று தசாப்தங்களுக்கு பிறகு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியிருப்பது அதன் அரசியலில் முக்கியமான உருநிலை மாற்றமாக அமைகிறது. ஜே.வி.பி.யின் அரசியலில் மாத்திரமல்ல இலங்கை அரசியல் வரலாற்றிலும் இது ஒரு மைல்கல்லாகும்.

சுமார் 60 வருடகால வரலாற்றில் ஜே.வி.பி. ஆயுதக்கிளர்ச்சிகளின் விளைவான பயங்கர அனுபவங்களுக்கு பிறகு ஜனநாயக அரசியல் மூலமாக ஒரு முழுமையான அரசியல் வட்டத்தை சுற்றி வந்து நிறைவு செய்திருக்கிறது. அதனால் அதன் மகத்தான தேர்தல் வெற்றி இலங்கையின் இடதுசாரி அரசியலைப் பொறுத்தவரையிலும் கூட முக்கியமான நிகழ்வாகும்.

ஜனாதிபதியாக திசாநாயக்க பதவியேற்றதை அடுத்து இலங்கையின் ஆட்சியதிகாரம் பாரம்பரியமான அரசியல் அதிகார வர்க்கத்தைப் பிரதிநிதித்துவம் செய்துவந்த அரசியல் கட்சிகளின் தலைவர்களிடமிருந்து அந்த வர்க்கத்துக்கு வெளியில் உள்ள சாதாரண குடும்ப பின்னணியைக் கொண்ட ஒருவரின் கைகளுக்கு வந்தது. தேசிய மக்கள் சக்தியின் அதிகப் பெரும்பான்மையான உறுப்பினர்களைக் கொண்ட புதிய பாராளுமன்றம் அந்த அதிகார மாற்றத்தை முழுமை பெறச் செய்வதாக அமைகிறது.

புதிய பாராளுமன்றம் இன்னொரு காரணத்துக்காகவும் வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாக அமைகிறது.

எந்தவொரு தேசிய கட்சியுமே இது காலவரை செய்திராத வகையில் இந்த தடவை பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தி தென்னிலங்கையில் மாத்திரமன்றி நாடு பூராவும் பெருவெற்றி பெற்றிருக்கிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் கணிசமான ஆசனங்களை அது கைப்பற்றியிருக்கிறது.

ஜனாதிபதி தேர்தலில் திசாநாயக்கவின் வெற்றியை அடுத்து அவரின் கட்சியை பாராளுமன்ற தேர்தலில் ஆதரிக்க வேண்டும் என்ற ஆர்வம் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் மத்தியில் வளர ஆரம்பித்தது. அந்த மக்கள் தங்களிடம்

> தங்களது கடந்தகால அரசியல் பாதையை சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்காமல் வெறுமனே உணர்ச்சிவசமான தேசியவாத சுலோகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நெடுகவும் பாராளுமன்றம் சென்று கொண்டிருக்கலாம் என்று நம்பிக்கொண்டிருந்த பல தமிழ்க் கட்சிகளுக்கு மக்கள் முறையான பாடத்தைப் புகட்டியிருக்கிறார்கள்.

வாக்கு கேட்கவந்த தமிழ் அரசியல்வாதிகளிடம் நேரடியாகவே தங்களது அந்த விருப்பத்தை வெளிப்படுத்தியும் இருந்தார்கள். ஆனால் தமிழ்ப் பகுதிகளில் ஒரு தேசிய மக்கள் சக்தி அலையே வீசும் என்று எவரும் நினைக்கவில்லை.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆறு பாராளுமன்ற ஆசனங்களில் மூன்று ஆசனங்களை கைப்பற்றிய தேசிய மக்கள் சக்தி பாரம்பரியமாக வடக்கை பிரதிநிதித்துவம் செய்துவந்த பாரம்பரிய தமிழ்க்கட்சிகளை பின்னுக்கு தள்ளியிருக்கிறது. தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் பெருமளவில் மக்கள் மத்தியில் பிரபல்யமில்லாதவர்கள் என்றபோதிலும் கூட வியக்கத்தக்க வெற்றியை அவர்களால் சாதிக்கக்கூடியதாக இருந்தது.

தமிழ் மக்கள் இந்தளவுக்கு ஆதரவை வழங்கியதற்கு முக்கியமான காரணம் தேசிய மக்கள் சக்தியின் மீதான கவர்ச்சி என்பதை விடவும் தங்களை இதுகால வரை பிரதிநிதித்துவம் செய்துவந்த தமிழ் அரசியல் கட்சிகள் மீதான வெறுப்பு என்பதே உண்மையாகும்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரான கடந்த பதினைந்துக்கும் அதிகமான வருடங்களில் தங்களது தேவைகளையும் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்றுவதற்கு ஒருமித்த நிலைப்பாட்டுடன் ஐக்கியமாகச் செயற்படத் தவறிய தமிழ் அரசியல்வாதிகள் மீது தமிழ் மக்கள் பெரும் அதிருப்தி கொண்டிருக்கிறார்கள்.

இந்த அரசியல்வாதிகளின் அணுகுமுறைகள் காரணமாக தமிழ் அரசியல் சமுதாயம் சிதறுப்பட்டுக் கிடக்கிறது. பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட பெருவாரியான அரசியல் கட்சிகளும் குழுக்களும் இதற்கு சான்று. தங்கள் மத்தியில் உருப்படியான மாற்று ஒன்று இல்லாத நிலையில் ஜனாதிபதி திசாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தியின் பக்கம் திரும்புவதை தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியிருக்கவில்லை.

தேர்தல் பிரசாரங்களின் இறுதி கட்டத்தில் தமிழ் அரசியல்வாதிகள் தேசிய மக்கள் சக்தி மீது கடுமையான தாக்குதல்களை தொடுத்தனர். தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் விடயத்தில் மற்றைய சிங்கள கட்சிகளுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் வித்தியாசம் இல்லை என்று அவர்கள் தமிழ் மக்களுக்கு கூறினார்கள்.

தேர்தல் பிரசாரத்துக்காக யாழ்ப்பாணத்துக்கு வந்த ஜனாதிபதி திசாநாயக்க இனப்பிரச்சினை தீர்வு குறித்து எதுவும் பேசவில்லை என்றும் அவர்கள் கூறினார்கள். ஆனால் மக்கள் இந்த எதிர்ப்பிரசாரங்களை பொருட்படுத்தவில்லை என்பதை அவர்கள் வாக்களித்த முறை வெளிச்சம்போட்டுக் காட்டுகிறது.

தேசியக் கட்சி ஒன்றைச் சேர்ந்த பல பாராளுமன்ற உறுப்பினர்கள் வடக்கு, கிழக்கில் இருந்து முன்னென்றும் இல்லாத வகையில் இந்த தடவை பாராளுமன்றம் செல்ல விருக்கிறார்கள். தமிழ் மக்கள் தங்களுக்கு அளித்த ஆதரவை ஜனாதிபதியும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் எவ்வாறு வியாக்கியானம் செய்கிறார்களோ தெரியவில்லை.

ஆனால், தங்களது கடந்தகால அரசியல் பாதையை சுயவிமர்சனத்துக்கு உள்ளாக்காமல் வெறுமனே உணர்ச்சிவசமான தேசியவாத சுலோகங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு தமிழ் மக்களை நெடுகவும் ஏமாற்றி பாராளுமன்றம் சென்றுகொண்டிருக்கலாம் என்று நம்பியதன் விளைவை பல தமிழ்க் கட்சிகள் அனுபவித்துக் கொண்டிருக்கின்றன என்பது மாத்திரம் உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் தமிழியல் நூலகம் திறப்பு

ஈழத் தமிழர் வாழ்வியலின் மரபுவழிப் பண்புகள் பலவற்றையும் உள்வாங்கிய உணர்வோடு உயர்கல்விப் பணியாற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து பொன் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக் கின்றது. இலங்கைத் தமிழர்களின் உயர் கல்வி வரலாற்றின் உன்னதமானதொரு மைல்கல் 1974.10.06 இல் ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகமாகும்.

இப் பொன்விழா ஆண்டில் தமிழியல் சார்ந்த ஆராய்ச்சிக்கு வலுவூட்டும் செயற்பாடுகளுள் ஒன்றாக 'தமிழியல் நூலகம்' 29.10.2024 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் காணப்படக் கூடிய தமிழியல் சார்ந்த தொகுப்புக்களைச் சேகரித்துப் பாதுகாக்க வேண்டும், தமிழியல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி முதலான அறிவுசார் செயற்பாடுகளுக்கு உதவும் வகையிலமைந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்பது சிங்கப்பூரில் வாழ்ந்து மறைந்த நன்கொடைச் செம்மலான கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களுள் ஒன்றாக இருந்துள்ளது. இது தொடர்பில் கந்தையா கார்த்திகேசன் 1975ஆம் ஆண்டு தைமாதம் ஆறாம் திகதி உயில் ஒன்றை எழுதி வைத்திருந்தார்.

இதனடிப்படையில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழியலும், இசையியலும் மேம்பாடு காண்பதற்கெனப் பெரும் தொகை அவரால் உவந்தளிக்கப்பட்டிருந்தது.

### ஆரம்பப் பணிகள்

ஆரம்பத்தில் தமிழ்த்துறைக்கென ஒரு நூலகத்தை ஆரம்பிப்பது பற்றி சிந்திக்கப்பட்ட போதும், பின்னர் நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தனியானதொரு அமைவிடத்தில் 'தமிழியல் நூலகம்' என்னும் பெயருடன் ஒரு நூலகத்தை நிறுவுவதற்கான செயற்றிட்டப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

2015ஆண்டில் இருந்து இம் முயற்சிகளைப் பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுத்த போதிலும், ஏறத்தாளப் பதினைந்து ஆண்டுகளின் பின்னர் 2021 ஆம் ஆண்டிலேயே தமிழியல் நூலகத்தை நிறுவும் முயற்சி சாத்தியமாகியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 09.06.2021 இல் நடைபெற்ற 454 வது பேரவைக் கூட்டத்தில் தமிழியல் நூலகத்தை நிறுவுவதற்கான அனுமதியும், தேவையான நிதி ஒதுக்கீடும் கிடைக்கப்பெற்றன. கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினதும், துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறிசற்குணராசாவின் பெருமுயற்சி மற்றும் வழிகாட்டுதலிலும் இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ் வேலையை முன்னெடுப்பதற்காக நூலகப் பணியாட்தொகுதியினரை உள்ளடக்கியதான செயற்றிட்டக் குழுவினர் நியமிக்கப்பட்டனர். நன்கொடையாளர் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசனின் இறுதி விருப்பங்களில் ஒன்றான தமிழியல் நூலகம் அமைக்கும் விருப்பம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளின் பின்னர் இப்போது நிறைவேறுகின்றமை மகிழ்ச்சி தரும் விடயமாகும்.

### தமிழியல் நூலகத்தின் சிறப்பம்சங்கள்

பொது மக்களுக்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்குதல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகம் மாத்திரமல்லாமல், அதற்கும் அப்பாற்சென்று பொதுசனங்களையும் உள்ளீர்த்துச் சேவை வழங்கும் நோக்கோடு ஒரு விரிந்த சேவைத் தளத்தில் தமிழியல் நூலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. பொது மக்கள், பாலபண்டித மாணவர்கள், தமிழ்ப் பண்டித மாணவர்கள், திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய மாணவர்கள், தொழில் நுட்பக் கல்லூரி மாணவர்கள், வெளிநிலை ஆராய்ச்சியாளர்கள் என்றவாறு விசாலமான வாசகர் குழுமம் தமிழியல் நூலகத்தின் பயனாளிகளாக வரவேற்கப்படுவர்.

### இலங்கைத் தமிழியல் வெளியீடுகளுக்கான சேகரிப்பு நிலையம்

இந்நூலகம் இலங்கைவாழ் தமிழர்தம் வெளியீடுகளின் அனைத்து அம்சங்களையும் சேகரித்துப் பாதுகாத்துப் பாவனைக்கு வழங்குவதில் சிறப்புக் கவனம் செலுத்துகின்றது. இலங்கைத் தமிழர் தம் மரபுரிமை சாரர்ந்த ஆக்கங்களைத் தேடித் தொகுப் பதில் தீவிர செயற்பாட்டுடன் தொடர்ந்து பணியாற்றத் திட்டமிட் டுள்ளது.

யாழ்ப்பாணக் கருவூலம், என்றதொரு கருத்துருவாக்கத்தின் கீழ் இப் பிரதேசத்திற்கேயுரிய தனித்துவமான வெளியீடுகள் யாவற்றையும் வடித்தெடுத்துப் பாதுகாக்கும் சிறப்புச் செயற்பாடொன்றும் தமிழியல் நூலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந் நூலகத்தினுள்ளேயே ஒரு தனியான பகுதியில் இவ்வகை நூல்கள் சேகரிக்க ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திறப்புவிழாக் காணும் இந்நாளில் ஏறத்தாழ ஆயிரம் எண்ணிக்கையிலான அரிய நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.


சிங்கப்பூர் எஸ்டேட் கந்தையா கார்த்திகேசன்

### ஈழத்துத் தமிழ்ச் சான்றோர் வரலாற்றினை இயம்பும் எண்ணிமத் தளம்

தமிழ் வளர்த்த ஈழத்துச் சான்றோர்களின் உருவப் படங்கள் நூலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஏறத்தாழ ஆயிரத்தெண்ணூறுகளில் இருந்து தமிழியலைத் தமது வாழ்வியலாகக் கொண்டு எமது பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த ஈழத்துத் தமிழ்ச் சான்றோரை நினைவுகூர்ந்து, இளந்தலைமுறையினர்க்கு அச்சான்றோர்களை அறிமுகஞ்செய்து வைப்பது இச்செயற்பாட்டின் நோக்கமாக உள்ளது.

தமிழியல் கருவூலம், என்ற எண்ணிமத் தளத்தினூடாக தமிழ்ச் சான்றோரின் வாழ்வியலையும், படைப்புக்களையும் சேகரித்துப் பாதுகாத்து இணையவழித் தகவற் பரவலாக்கம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### பண்டிதர் வகுப்புக்கள்

ஆரிய திராவிட பாக்ஷா அபிவிருத்திச் சங்கம் பண்டிதர் கற்கை நெறிகளைப் பன்னெடுங்காலமாக நடாத்தி வந்தது. பின்னர் இச்சங்கம் நலிவுற்றதைத் தொடர்ந்து, ஈழத் தமிழர்தம் பாரம்பரியக் கல்விமுறையும் முடிவு நிலை நோக்கிச் செல்வதயாயிற்று. இந்நிலையில், ஆரிய திராவிட பாக்ஷா அபிவிருத்திச் சங்கத்தின் எழுத்து நிலை ஒப்புதலோடு, பண்டிதர் கற்கையைத் தமிழியல் நூலகம் தனது செயற்பாடுகளுள் ஒன்றாக முன்னெடுத்து வருகின்றது. ஒவ்வொரு அணியிலும் ஐம்பது மாணவர்களுக்கு கந்தையா கார்த்திகேசன் நிதியத்தின் புலமைப் பரிசில் அடிப்படையில் இக்கற்கை நெறியைத் தொடர்வதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் கல்வியின் ஆழமான கற்றலுக்கு இது வழிவகுக்கும்.

### தமிழியல் ஆய்வுகளுக்கான வளநிலையம்

தமிழியல் என்பது தமிழ்மொழி, பண்பாடு, அறிவியல் முதலான அனைத்தையும் உள்ளீர்த்ததொரு செல்நெறி. இதற்கானதொரு ஒரு உசாத்துணை நிலையமாகத் தமிழியல் நூலகம் செயற்படும் வண்ணம் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆய்வுத்துணைக்கருவி நூல்களை உருவாக்கி வழங்குவதும் தமிழியல் நூலகத்தின் இன்னொரு செயற்பாடாகும். ஈழத்துத் தமிழ் மரபில் வெளியாகிய காலத்தால் முற்பட்ட 'வித்தகம்', 'ஞாயிறு', 'ஈழகேசரி' ,'சிந்தனை' போன்ற வெளியீடுகளை இனங்கண்டு அவற்றின் உள்ளடக்கத்தை வெளிக் கொணரும் வகையில் சொல்லடைவுகளைத் தயாரித்தல், மீள்பதிப்புச் செய்தல், தகவலைத் தெரிவு செய்து வாசகருக்கு வழங்குதல் முதலான ஆராய்ச்சியுதவிச் சேவைகளும் தமிழியல் நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### சேவை வழுங்குதல்

ஆரோக்கியமான கற்றற் சூழல், மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகளுக்கான இணைய வசதியுடனான கணினிக்கூடம், வார இறுதி நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களிலும் தமிழியல் நூலகத்தைப் பயன்படுத்தக் கூடியதாக இருத்தல் என்றவாறு இந்நூலகம் அக்ரோபர் 29 ஆம் திகதி முதல் இயங்க ஆரம்பித்திருக்குது.


இந்நூலகம் ஒரு உசாத்துணை நூலகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சூழலிலே தொடர்ந்து பணியாற்றுவதைத் திடசங்கற்பமாகக் கொண்டு ஆரம்பிக்கப்படுகின்றமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் புதியதொரு பரிமாணத்தைத் தோற்றிவிக்கின்றது.

"எங்கள் தமிழ்மொழி, எங்கள் தமிழ்மொழி என்றென்றும் வாழியவே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்கதவால் உள்ளே புகுந்தவரை முன்கதவால் வெளியேற்றினாலும் மீண்டும் பின்கதவால் உள்நுழைய...

பனங்காட்டான்



மெல்லென வீச ஆரம்பித்த காற்று, பெரும் புயலாகி வீச்சுக் கொண்டால் ஏற்படும் பிரளயம் எவ்வாறானதாக இருக்கும் என்பதை கடந்த வாரம் (நவம்பர் 14) இடம்பெற்ற இலங்கையின் பொதுத்தேர்தல் காட்டியது. இதனால் எழுந்த பெரும் அலையில் பல திமிங்கிலங்கள் கரையொதுக்கப்பட்டுவிட்டன. இப்படி நடக்குமா என்று வியப்பதற்குள் எல்லாமே மாற்றம் என்ற பெயரில் நடந்தேறிவிட்டது.

கடந்த செப்டம்பர் 21ல் ஜனாதிபதியாகிய தோழர் அநுர குமார திஸ்ஸநாயக்க உலகளாவிய பார்வையில் மாக்ஸிச வெற்றிச் சின்னமாக காட்சி கொடுக்கிறார். மூன்று எம்.பிக்களோடு இருந்த இவருக்கு 159 எம்.பிக்களை கடந்த வார தேர்தல் வழங்கியுள்ளது. இப்படியொரு வெற்றியை அவர் கேட்கவில்லை. சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற அறுதிப் பெரும்பான்மை (113) ஆசனங்களையே இவர் கேட்டார். ஆனால், மகாஜனங்கள் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை (159) இவருக்கு வாரி வழங்கியுள்ளனர்.

எதிர்பாராத இந்த அபார வெற்றி அநுர குமார அணியினரை நிச்சயம் திக்குமுக்காடச் செய்திருக்கும் - காரணம், தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு எமக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை இல்லையென்று கூறித் தப்ப முடியாத நெருக்கடிக்குள் இவர்களைச் சிக்க வைத்துள்ளது. இவ்வாறான நெருக்கடி நிலைமையை உருவாக்கியவர்களுள் தமிழ் மக்களும் முக்கிய பங்காளிகள்.

ஜனாதிபதி தேர்தல் என்பது ஒருவரை மையப்படுத்தியது. பொதுத்தேர்தல் என்பது பல அரசியற்கட்சிகளையும் சுயேட்சைக் குழுக்களையும் சம்பந்தப்படுத்தியது. 225 நாடாளுமன்ற உறுப்பினர்களை நேரடியாக தெரிவு செய்வதுடன் இது பிணைக்கப்பட்டது. அதனாற்தான், ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த சூடு கலைவதற்குள் பொதுத்தேர்தலை அநுர குமார நடத்தினார். இந்தத் தேர்தல் வெற்றியை ஜே.வி.பி.யின் வெற்றி என்றோ, அல்லது தேசிய மக்கள் சக்தியின் வெற்றி என்றோ எவரும் பார்க்கவில்லை - சர்வதேசம் உட்பட. அநுர குமார என்ற தனி ஒருவருக்குக் கிடைத்த வெற்றியாகவே இது கொண்டாடப்படுகிறது.

"உரை, உடை, நடை என்பவைகளை உள்ளடக்கிய ஒருவித வசீகரத்தை அநுர குமாரவிடம் மக்கள் பார்க்கின்றனர். அனைவரையும் சமமாகப் பார்க்கும் மாக்ஸிச சிந்தனை, அடித்தள மக்களின்பால் காட்டும் அதீத சிரத்தை, ஊழல் ஒழிப்பு, பொருளாதார மேம்பாட்டு ஒழுங்கமைப்பு என்பன அவர் மீதான நம்பிக்கையை மக்களிடம் ஊட்டியுள்ளது. வாதம், விவாதம் இரண்டிலும் அவரது நாவன்மை பளிச்சிடுகிறது" என்று தமிழரசு கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர் நேற்று என்னுடன் உரையாடிய போது குறிப்பிட்டதைக் கேட்டு அதிர்ந்து போனேன். இதுதான் உண்மை என்றால், தமிழர் வாக்குகளை லட்சக் கணக்கில் இவரால் பெற முடிந்தது வியப்பாகத் தெரியவில்லை.

இந்தப் பின்னணியில் பார்க்கையில் 159 ஆசனங்களை இவரால் பெற முடிந்தது புதினமன்று. கோதபாய பதவி விலகலால் ஜனாதிபதி கதிரையைப் பிடித்த ரணிலின் தலைமையிலான அணி இந்தத் தேர்தலிலும் அடியோடு சரிந்துள்ளது. நாற்பது ஆண்டுகளுக்கு ராஜபக்சக்களை அசைக்க முடியாதென்று கோசம் இட்டவாறு நாட்டை நாசமாக்கியவர்களை மக்கள் விரட்டி விட்டனர். சந்திரிகா குமாரதுங்க, மைத்திரிபால சிறிசேன என்ற முன்னாள் ஜனாதிபதிகள் செல்லாக் காசாகி காணாமல் போயுள்ளனர்.

எல்லாமே சாதகமாகக் காணப்படும் சமகாலச் சூழலை உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்றுவதற்கான காலமாக அநுர குமார அணி பார்க்கிறது. இதனால் இதற்கான தேர்தல்களை அடுத்த சில மாதங்களுக்குள் நடத்த ஏற்பாடாகி வருகிறது. 24 மாநகர சபைகள், 41 பட்டின சபைகள், 275 பிரதேச சபைகளுக்கு இந்தத் தேர்தல் நடத்தப்பட போகிறது. சாதாரண மக்களின் அடிமட்ட அரசியல் பங்களிப்புக்கானவைகளாக அமையும் இச்சபைகளை வென்றுவிட்டால் குட்டித்தீவு முழுவதுமே ஒரு கைக்குள் வந்துவிடும். இது இன்னொரு சூறாவளியாக மாறும். தேர்தலின் முடிவு ஒற்றைக்கட்சி ஆட்சியை இன மத வர்க்க பேதமின்றி மக்கள் அனுபவிப்பதற்கு அமைவது தவிர்க்க முடியாததாகும்.

நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் பலரது பார்வையையும் ஒன்றுசேர திரும்பிப் பார்க்க வைத்தது தமிழர் தரப்பிலிருந்து அநுர குமாரவுக்குக் கிடைத்த அபார வரவேற்பு. சாதாரணமான வரவேற்பாக ஓரிரு ஆசனங்களை தமிழர் பிரதேசங்களிலிருந்து இவர் பெறுவாரென எதிர்பார்க்கப்பட்ட வேளையில், எதிர்பாராதவாறு தமிழ் தேசியத்தை காணாமல் செய்யும் வகையில் வெற்றி கிடைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் ஆறு ஆசனங்களில் மூன்றை அநுர குமார பெற்றுள்ளார். வன்னி மாவட்டத்தில் இரண்டை இலகுவாக வசமாக்கியுள்ளார். மொத்தத்தில் வட மாகாணத்தில் ஐந்து தமிழர் அநுர குமார அணியில் வெற்றி பெற்றுள்ளது ஒரு வரலாற்றுச் சாதனை. இதுபற்றி சர்வதேசம் எவ்வாறு பார்க்கிறது என்பதற்கு ஓர் உதாரணமாக அசோசியேட்டட் பிரஸ் வெளியிட்ட கட்டுரையின் ஒரு பந்தியை இங்கு பார்ப்பது பொருத்தமானது.

"இது பெரிய ஆச்சரியம். நாட்டின் தேர்தல் நிலப்பரப்பில் பெரியதொரு மாற்றமாக அவரது (அநுர குமார) கட்சி வடக்கில் தமிழின மக்களின் இதயப் பகுதியான யாழ்ப்பாண மாவட்டத்தையும், மற்றும் பல சிறுபான்மையினரின் கோட்டைகளையும் வென்றுள்ளது. யாழ்ப்பாண வெற்றியானது, சுதந்திரம் பெற்றதிலிருந்து வடக்கின் அரசியலில் ஆதிக்கம் செலுத்தி வரும் தமிழ் இனவாதக் கட்சிகளுக்கு பெரும் பாதிப்பைக் குறிக்கிறது. பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் மீது நீண்டகாலமாக சந்தேகம் கொண்டிருந்த தமிழர்களின் அணுகுமுறையிலும் இது பெரிய மாற்றமாகும். சிங்களவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள அரசாங்கங்களால் தாங்கள் ஓரங்கட்டப்படுவதாகக் கூறி, தனியொரு தாயகத்தை உருவாக்க 1983-2009ல் தமிழின கிளர்ச்சியாளர்கள் தோல்வியுற்ற உள்நாட்டுப் போரில் ஈடுபட்டனர்" என்று அசோசியேட்டட் பிரஸ் கூறியுள்ளதை மறுப்பதற்கில்லை.

> தமிழ்த் தேசியத்தின் மகுடமாகத் திகழும் தமிழர் தாயகத்தின் வடமாநிலம் தோல்வியால் தலைகுனிந்து நிற்கிறது. முதன்முதலாக இங்குள்ள ஐந்து ஆசனங்கள் தெற்கிடம் பறிகொடுக்கப்பட்டு விட்டது. இதன் காரணகர்த்தாவானவருக்கு தோல்வியை பரிசாக வழங்கியுள்ளனர் மக்கள். ஆனாலும் அதனை ஏற்றுக் கொண்டு விடைபெற அவர் தயாராகவில்லை. தமிழ்த் தேசியத்தை அழிப்பதற்கு இன்னும் அவருக்கு வேலை இருக்கிறது போலும்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து வெறியாட்டம் மேற்கொண்டமை, மகிந்த ராஜபக்ச தமிழின படுகொலையை மேற்கொண்டபோது அதற்குத் தேவையான படைத்துறை ஆளணியை சேர்த்துக் கொடுத்தமை, 13ம் திருத்தத்தில் இடம்பெற்ற வடக்கையும் கிழக்கையும் இணைக்கும் அலகை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்து இல்லாமற் செய்தமை போன்றவைகளை அநுர குமார தரப்பினர் கடந்த காலங்களில் மேற்கொண்டனர் என்பதையும் மறந்து தமிழர்கள் இப்பொதுத் தேர்தலில் அவருக்கு அமோக ஆதரவு வழங்கினர் என்பது உண்மையிலேயே ஆச்சரியமானதுதான்.

முன்னைய சிங்களத் தலைவர்களுக்கு அவ்வப்போது ஆதரவு வழங்கி, தேர்தல்களில் வாக்களித்து ஏமாந்தோம். அநுரவுக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கிப் பார்ப்போம் என்பதிலும் பார்க்க, தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றி எத்திப் பிழைக்கும் அரசியல் நடத்தும் தமிழ் கட்சிகளுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டுமென்ற சிந்தனையே இந்த மன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதே யதார்த்தம். அதிலும் முக்கியமாக, முள்ளிவாய்க்கால் 2009 மௌனத்தின் பின்னரான காலப்பகுதி யில் தமிழ்த் தேசியத்தை தமிழ்த் தலைவர்கள் உருட்டி விளையாடி மக்களை ஏமாற்றியதற்கு தண்டனை வழங்க வேண்டுமென்ற நோக்கமும் அநுர குமாரவுக்கான ஆதரவுக்கு காரணமாக இருந்தது.

இதிலும் சம்பந்தன் - சுமந்திரன் தலைமையிலான கூட்டு தமிழ் இளையோர் மத்தியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட ஒட்டகம் என வர்ணிக்கப்பட்ட சுமந்திரன் அதற்கேற்றாற்போல் முதலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை உடைத்தெறிந்தார். பின்னர் தமிழரசுக் கட்சியை பிளவுபடுத்தினார். அதன் தலைமை பதவிக்கு போட்டியிட்டு தோல்வி கண்ட பின்னர் தலைமைப் பீடத்திலேயே கை வைக்கத் தொடங்கினார்.

அதேசமயம், தெற்கில் ரணில், சஜித், அநுர ஆகியோருடன் வெவ்வேறு தளங்களில் தமது சுயதேவைக்காக தமிழ்த் தேசியத்துக்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபட்டார். ஜே.வி.பி. வடக்கில் நடத்திய மே தின கூட்டத்தில் செஞ்சட்டை அணிந்து அநுர குமாரவுடன் முன்வரிசையில் சென்றார். செப்டம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் வாக்குகளை சஜித்துக்கு அள்ளிக் கொடுக்க அவரது மேடையேறி உரையாற்றினார். அநுர குமாரவின் பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழர் விவகாரப் பகுதியை தாமே தயாரித்துக் கொடுத்ததாகக் கூறி புளகாங்கிதம் அடைந்தார். இவரை சட்ட மாஅதிபர் என்று ரணில் புகழாரம் சூட்டியதையும் மறந்துவிட முடியாது.

பொதுத்தேர்தலில் இவர் வென்றால் அதற்கான சன்மானம் அமைச்சர் பதவி என்றும் கூறப்பட்டது. தமிழருக்கு இன்னுமொரு லக்ஷ்மன் கதிர்காமரா என்று பலரை கேட்கவும் வைத்தார். இப்படியெல்லாம் நாடகம் ஆடியவருக்கு தேர்தல் மூலம் சரியான பாடத்தை மக்கள் புகட்டினர். யாருக்கு வாக்களிப்பது என்பதைவிட யாருக்கு வாக்களிக்கக் கூடாது என்ற பட்டியலில் தமிழ் மக்களிடையே முதலிடம் பெற்றிருந்தவர் சுமந்திரனேதான். பல தடவை வாக்குத் தவறிய இவரை தங்கள் வாக்குகளால் தோற்கடித்து தங்கள் முடிவை பொது மக்கள் பதிவு செய்தனர்.

தேர்தலில் தோற்றால் தேசியப் பட்டியல் ஊடாக எம்.பி.யாக மாட்டேன் என்று கூறிய சத்தியவாக்கை மறந்த சத்தியவானான இவர், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானித்தால் தேசியப் பட்டியல் எம்.பி.யை ஏற்பேன் என்று இப்போது கூறுவதை அரசியல் விபசாரம் என்றில்லாமல் வேறு எவ்வாறு கூற முடியும்? மத்திய குழு என்பதே இவரது ஆட்கள் அடங்கிய குழு என்பதை தேர்தல் அபேட்சகர் நியமனம் அம்பலப்படுத்தியது. இப்போது அதே குழுதான் இவரை தேசியப் பட்டியலுக்கும் தெரியப் போகிறதாம்.


பின்கதவால் (தேசியப் பட்டியல்) உள்வந்தவரை, முன்கதவால் (தேர்தலில் தோற்கடித்து) வெளியேற்றினாலும் அவர் விடுவதாக இல்லை. மீண்டும் பின்கதவால் (தேசியப் பட்டியல்) உள்நுழையவே முயற்சிக்கிறார். போக்கிரித்தனமான அரசியலுக்கு இடமளிக்காது பார்த்துக் கொள்வது மானமுள்ள தமிழரின் பாரிய பொறுப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை பாராளுமன்ற தேர்தல்: அநுர குமார மாபெரும் வெற்றி மக்கள் சொன்ன செய்தி என்ன?

முரளிதரன் காசிவிஸ்வநாதன்

இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி அபார வெற்றியைப் பெற்றிருக்கிறது. இவ்வளவு பெரிய வெற்றியை அக்கட்சிப் பெறக் காரணம் என்ன?



இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, ஒட்டுமொத்தமாக 159 இடங்களைக் கைப்பற்றியிருக்கிறது. கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெறும் 3 இடங்களை மட்டுமே கைப்பற்றிய தேசிய மக்கள் சக்திக்கு இது மிகப் பெரிய வெற்றியாகப் பார்க்கப்படுகிறது.

### ஆச்சர்யமாக பார்க்கப்படும் வெற்றி

இலங்கையின் ஜனாதிபதியாக கடந்த செப்டம்பரில் நடந்த தேர்தலில் தேர்வான அநுர குமார திஸாநாயக்க, பதவியேற்ற அடுத்த நாளே பாராளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டார்.

உடனடியாக புதிய பாராளுமன்றத்தைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் நவம்பர் 14ஆம் தேதி நடக்குமென அறிவிக்கப்பட்டது.

இலங்கை பாராளுமன்றத்தில் ஒட்டுமொத்தமாக உள்ள 225 இடங்களில் 196 இடங்களுக்கான பிரதிநிதிகள் மக்களால் நேரடியாகவும் 29 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் மூலமாகவும் நிரப்பப்படுகிறார்கள்.

தற்போது வந்துள்ள முடிவுகளின்படி, அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி மக்கள் வாக்களிப்பின் மூலம் 141 இடங்களையும் தேசியப் பட்டியலின் மூலம் 18 இடங்களையும் பெற்று, ஒட்டுமொத்தமாக 159 இடங்களை அடைந்துள்ளது.

"இந்தத் தேர்தல் குறித்து கருத்துக்களைத் தெரிவித்த எந்த அவதானியும் தேசிய மக்கள் சக்திக்கு இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்குமெனக் கருதவில்லை. அவருக்குப் பெரும்பான்மை கிடைக்கலாம் அல்லது பிற கட்சிகளுடன் சேர்ந்து கூட்டணி அரசை அமைப்பார் என்றுதான் கருதப்பட்டது. இது யாருமே எதிர்பார்க்காத வெற்றி" என ஆச்சரியம் தெரிவிக்கிறார் மூத்த பத்திரிகையாளரான வீரகத்தி தனபாலசிங்கம்.

சிறுபான்மையினர் அதிகமாக வசிக்கும் வடக்கு - கிழக்கில் மட்டக்களப்பு தவிர்த்த எல்லா தேர்தல் மாவட்டங்களிலும் அநுர குமார திஸாநாயக்கவின் தேசிய மக்கள் சக்தி கூடுதல் இடங்களைக் கைப்பற்றியிருப்பதும் ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெறும் மூன்று இடங்களைப் பெற்ற தேசிய மக்கள் சக்தி, ஜனாதிபதி பதவியைக் கைப்பற்றியதே பெரும் ஆச்சரியத்தை அளித்த ஒரு ஜனநாயக நிகழ்வாக இருந்தது.


இருந்தாலும், ஜனாதிபதி தேர்தலிலும்கூட, வெற்றிக்குத் தேவையான 50 சதவீத வாக்குகளைப் பெற முடியாமல், விருப்ப வாக்குகளின் மூலமே அநுரவின் வெற்றி அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தற்போது தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்திருக்கும் வெற்றி எல்லாத் தரப்பினருக்குமே மிகுந்த ஆச்சரியத்தை அளித்திருக்கிறது.

"இது ஒரு வரலாற்று வெற்றி. ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியை நோக்கிய அலை இருந்தது. ஆனால், மூன்றில் இரண்டு பங்கு இடங்கள் கிடைக்கும் என யாருமே எதிர்பார்க்கவில்லை. இதற்கு முக்கியமான காரணம், எதிர்க் கட்சிகள்தான். எதிர்க்கட்சிகள் சீர் குலைந்து போயிருந்தன. அவற்றால், தேசிய மக்கள் சக்திக்கு எதிராக ஒரு வலுவான போட்டியைக்கூட தர முடியவில்லை" என்கிறார் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி அகிலன் கதிர்காமர்.

2020-ஆம் ஆண்டு ஏற்பட்ட கொரோனா பேரிடர், இலங்கைக்கு மிகப் பெரிய அளவில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியது.

இதையடுத்து 2022-ஆம் ஆண்டில் "அரகலய" என்று குறிப்பிடப்பட்ட மக்கள் போராட்டம் வெடித்தது. ஒட்டு மொத்தக் கோபமும் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசின் மீது திரும்பியது. இதற்குப் பிறகு, அவர் பதவி விலகி, ரணில் பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.



"இந்நிலையில், மக்கள் கடுமையாக வெறுப்படைந்திருந்தார்கள். ஒரு மாற்றத்தை எதிர்நோக்கியிருந்தார்கள். பழைய அரசியல்வாதிகளை தூக்கியெறிய வேண்டுமென நினைத்தார்கள். இதனால் மற்ற அரசியல் கட்சிகளால் பல இடங்களில் மக்கள் மத்தியில் சென்று பிரசாரம்கூட செய்ய முடியாத சூழலில்தான் இந்தத் தேர்தல் நடைபெற்றது. ஆகவே இவ்வளவு பெரிய வெற்றி அவருக்குக் கிடைத்திருக்கிறது" என்கிறார் அகிலன் கதிர்காமர்.

அகிலன் சுட்டிக்காட்டுவதைப்போல, பல பாரம்பரிய, மூத்த தலைவர்கள் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்தே ஒதுங்கிக் கொண்டார்கள்.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு முன்பும் பின்பும் இலங்கை அரசியலில் பெரும் ஆதிக்கம் செலுத்திய ராஜபக்ஷவின் குடும்பத்திலிருந்து மகிந்த ராஜபக்ஷவின் சகோதரர் சமல் ராஜபக்ஷவின் மகன் ஷஷிந்திர குமார ராஜபக்ஷ மட்டுமே தேர்தலில் போட்டியிட்டார். அவரும் தோல்வியைத் தழுவினர்.

ஜனாதிபதி தேர்தலில் தோல்வியைச் சந்தித்த எதிர்க்கட்சிகள், மீண்டெழுவதற்கு முன்பே நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தி, அந்த வெற்றியின் அலையிலேயே இந்த வெற்றியைப் பெற்றுவிட்டார் அநுரகுமார என்கிறார் தனபாலசிங்கம்.


"எதிர்க்கட்சிகள் தங்களை ஒரு வலுவான சக்தியாக முன்வைக்கவில்லை. மாறாக, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் அனுபவமில்லாதவர்கள் என்பது போன்ற குறைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவர்களைத் தேர்வுசெய்தால், "எல் போர்ட்" பாராளுமன்றம் என்றுதான் பெயர் வைக்க வேண்டும் என்றார்கள். இவர்களைத் தேர்வு செய்தால் மீண்டும் பொருளாதார வங்குரோத்து நிலை ஏற்படும் என்றார். ஆனால், மக்கள் தெளிவாக இருந்தார்கள். இது எதையுமே காதுகொடுத்துக் கேட்கவில்லை" என்கிறார் தனபாலசிங்கம்.

### இலங்கையின் வடக்கும் கிழக்கும் சொல்லும் செய்தி என்ன?

வடக்கிலும் கிழக்கிலும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைத்த வெற்றி, பல செய்திகளை குறிப்பிட்டுக் காட்டுவதாகச் சொல்கிறார் அகிலன்.

"வடக்கிலும் கிழக்கிலும் ஒரு தேசியக் கட்சி இவ்வளவு பெறிய வெற்றியைப் பெற்றது இதுதான் முதல் முறை. இதற்குக் காரணம், அங்கிருந்த தமிழ் தேசியவாத அரசியல்வாதிகளால் எந்தப் பிரச்சனைக்கும் ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை. உள்நாட்டுப் போர் முடிந்த பிறகு, பல்வேறு நெருக்கடிகளை அங்கிருந்த மக்கள் எதிர்கொண்டார்கள். கொரோனா காலகட்டத்திலும் அதற்குப் பிந்தைய பொருளாதார நெருக்கடியின் போதும் அவர்களால் எந்தத் தீர்வையும் முன்வைக்க முடியவில்லை. எந்த நிவாரணத்தையும் தர முடியவில்லை. இந்த பொருளாதார நெருக்கடி வடக்கை பெரிதாக பாதிக்காது என்றெல்லாம்கூட சொன்னார்கள். ஆகவே, தமிழ் தேசியத் தலைமை மீதான கோபத்தில்தான் இப்படி ஒரு தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள்" என்கிறார் அகிலன் கதிர்காமர்.

இப்போது மிகப் பெரிய வெற்றியை தேசிய மக்கள் சக்தி பெற்றிருந்தாலும், பொருளாதாரத்தை மீட்பது, விலைவாசியைக் குறைப்பது, ஐஎம்எஃப் விதித்துள்ள பொருளாதார இலக்குகளை எட்டுவது போன்றவை மிகப் பெரிய சவாலாகவே இருக்கும். புதிய பாராளுமன்றம் நவம்பர் 21-ஆம் தேதி கூடும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. (பிபிசி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# மாறாத தமிழ் அரசியல்வாதிகளும் மாறிவிட்ட தமிழ் மக்களும்!



கந்தையா அருந்தவபாலன்

மாற்றம் ஒன்றே மாறாதது என்பது நியதி. மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் உயிரிகள் மட்டுமே நிலைத்து நீடித்து வாழ்கின்றன. மாறமறுப்பவை படிப் படிப்படியாக மறைந்து போய்விடுகின்றன. இவ்விதி உயிரிகளுக்கு மட்டுமல்ல சமூக மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கும் பொருந்தும். இலங்கையில் ஒருகாலத்தில் தீப்பெட்டி வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்த மரக்குச்சிகளிலான யானை மார்க் தீப்பெட்டித் தொழில் நிறுவனம் புதிய தொழில் நுட்பமான மெழுகுத்தாளுக்கு மாறமறுத்ததால் சந்தையிலிருந்து காணாமல் போய்விட்டது. சர்வதேச ரீதியில் கொடிகட்டிப் பறந்த 'நோகியா' கைப்பேசி உற்பத்தி நிறுவனம் நவீன 'அன்றோயிட்' தொழில் நுட்பத்துக்கு மாறத் தாமதித்ததால் அழிந்துபோனது. இது வர்த்தக நிறுவனங்களுக்கு மட்டுமன்றிச் சமூக நிறுவனங்களுக்கும் பொருந்தும். குடும்பம், பாடசாலை, கோயில் போல அரசியல் கட்சிகளும் சமூக நிறுவனங்களே. இந்த அரசியல் கட்சிகள் மாறிவரும் தேச, சர்வதேச சூழ்நிலைக்கேற்ப தமது அணுகுமுறைகளிலும் உத்திகளிலும் மட்டுமன்றி சிலவேளைகளில் அடிப்படைக்கொள்கைகளிலும் கூட மாற்றத்தை ஏற்படுத்தத் தவறுமிடத்து மக்களிடமிருந்து அந்நியப்பட்டு படிப்படியாக மறைந்து போவதற்கான வாய்ப்புகளுண்டு. அவ்வாறான ஒருநிலையை இலங்கையின் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி போன்றவற்றில் காண்கிறோம். இவ்வாறான ஒரு நிலை தமிழ்த் தேசியக் கட்சிகளெனக் கருதப்படும் பிரதானத் தமிழ்க் கட்சிகளுக்கும் ஏற்பட்டுவிடுமா? நடந்துமுடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவுகள் அதற்குக் கட்டியம் கூறி நிற்கிறதா?

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் பல தமிழ்க்கட்சிகளையும் அதன் தலைவர்களையும் தமிழ் மக்கள் நிரகரித்துள்ளதுடன் தெரிவான முன்னைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக்கூட மக்கள் குறைந்தளவு ஆதரவினையே வழங்கியிருப்பதை தேர்தல் முடிவுகள் காட்டி நிற்கின்றன. கிழக்கு மாவட்டங்களில் இப்பிரதிபலிப்புக் குறைவாகத் தென்பட்டாலும் வடக்கில் இது மிகத் தெளிவாகவே தெரிகிறது. உள்நாட்டு யுத்தம் நிறைவுக்கு வந்தபின் நடந்த மூன்று பொதுத் தேர்தல்களிலும் மக்களின் முதன்மைத் தெரிவு தமிழ்த் தேசியக் கட்சிகளாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் இத்தேர்தலில் அவர்களின் தெரிவு அவ்வாறு அமையவில்லை. வடக்கிலுள்ள இரண்டு தேர்தல் மாவட்டங்களான யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் மக்கள் தேசியக் கட்சியான தேசிய மக்கள் சக்திக்கே முன்னுரிமை அளித்துள்ளனர். இவ்விரு தேர்தல் மாவட்டங்களிலும் அக்கட்சி தனக்கு எதிராகப் போட்டியிட்ட தமிழ்த் தேசியக் கட்சிகளைவிட அதிகளவான வாக்குகளைப் பெற்றதுடன் கூடுதலான ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளது. இவ்விரு மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றியுள்ள அதே வேளை தமிழ்த் தேசியக் கட்சிகள் மொத்தமாக நான்கு ஆசனங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளன. இவற்றில் இலங்கைத் தமிழரசுக் கட்சி இரு ஆசனங்களையும் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஓர் ஆசனத்தையும் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளன. இந்த நான்கு ஆசனங்களில் மூன்றை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாலாவதை முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினரும் பெற்றுள்ளனர். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் இக்கட்சிகள் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் தேசியப்பட்டியல் உறுப்பினரையும் சேர்த்து ஆறு உறுப்பினர்களையும் வன்னியில் இரண்டு உறுப்பினர்களையும் பெற்று வடக்கில் மொத்தமாக எட்டு உறுப்பினர்களை இக்கட்சிகள் பெற்றிருந்தன. அது இத்தேர்தலில் அரைவாசியாகக் குறைந்துள்ளது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் இந்த வீழ்ச்சியின் தாக்கத்தை தனியே அவை இழந்துவிட்ட ஆசனங்களின் எண்ணிக்கையை மட்டும் கொண்டு மதிப்பிடுவது முழுமையானதாக அமையாது. கட்சிகளின் நிலை மற்றும் வேட்பாளர்கள் பின்புலம் என்வற்றுடனும் ஒப்பிடுவதன் மூலமே அதன் தாக்கம் முழுமையாகத் தெரியவரும். தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒவ்வொன்றிலும் போட்டியிட்ட முன்னிலை வேட்பாளர்களில் பலர் நீண்டகால அரசியல் அனுபவங்களைப் பெற்ற முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாகவும் மாகாண சபை உறுப்பினர்களாகவும் இருப்பதுடன் அவரகளில் பலர் முன்னாள் போராளிகளுமாவர். அது மட்டுமன்றி கட்சிகளைப் பொறுத்தமட்டிலும் இலங்கை சுதந்திரமடைந்த காலப் பகுதியிலிருந்து தமிழ் மக்களிடையே அரசியல் செய்துவரும் பாரம்பரிய கட்சிகளான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தமிழரசுக்கட்சி என்பவற்றுடன் நீண்டகாலம் ஆயுதப் போராட்டத்தில் பங்குபற்றி 1987 இல் உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய உடன்படிக்கையின் பின் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்துவிட்ட முன்னாள் போராளிகளின் கட்சிகளுமாக உள்ளன. அதனால் மக்கள் மத்தியில் நன்கு வேரூன்றி அடிமட்டக் கட்டமைப்புகளையும் உறுப்பினர்களையும் கணிசமாகக் கொண்ட கட்சிகளாகவும் அவை இருக்கின்றன. இவ்வாறு பலம் பொருந்திய கட்சிகளையும் அவற்றின் பிரபலமான வேட்பாளர்களையும் பின்தள்ளிய கட்சியோ வடக்கு கிழக்கில் குறிப்பிடத்தக்க வகையில் சீரான கட்டமைப்புக்களைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் அதன் வேட்பாளர்களைக்கூட இத்தேர்தலுக்கு முன் மக்கள் பெருமளவுக்கு அறிந்திருக்கவில்லை. வடக்கில் வேரூன்றியிராத கட்சி, அறிமுக மற்ற வேட்பாளர்கள், ஒப்பீட்டுரீதியில் அடிமட்ட மக்களிடையே செல்லாத பரப்புரைகள் என்ற பிரதான பலவீனங்களைக் கொண்டிருந்தபோதும் கட்சியிடம் இவை எல்லாவற்றிலும் அதிகளவு மேலோங்கிய நிலையிலிருந்த தமிழ்த் தேசியக் கட்சிகள் வீழ்ச்சியடைந்துள்ளன என்பது அவ்வீழ்ச்சியின் உண்மையான உயர்ந்த அளவை மதிப்பிட உதவும்.


தமிழ்த் தேசியக் கட்சிகள் மட்டுமன்றி 'ஆளுங்கட்சியே நம்ம கட்சி' என்று மாறி மாறி வரும் ஆட்சியாளர்களுடன் எப்போதும் இணக்க அரசியல் செய்து சலுகைகளையும் அதிகாரத்தையும் சுகித்து வந்த தமிழ்க் கட்சிகளையும் வேட்பாளரையுங் கூட இம்முறை தமிழ் மக்கள் முற்றாகத் தூங்கியெறிந்துள்ளதைக் காணமுடிகிறது. வடக்கில் டக்ளஸ், அங்கஜன் கிழக்கில் பிள்ளையான், கருணா போன்றவர்களும் இத்தேர்தலின் பின் காணாமலாக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக பாராளுமன்ற அரசியலில் இறங்கிய காலம் முதல் இன்றுவரை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராகவும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அந்தஸ்துள்ள அமைச்சராகவும் இருந்துவந்த டக்ளஸ் தேவானந்தாகூட அவரது வாக்காளர்களால் இம்முறை தூக்கியெறியப்பட்டுள்ளார். 2004 இல் ஏற்படுத்தப்பட்ட விடுதலைப் புலிகளின் பாராளுமன்ற அரசியல் அலையில்கூடத் தப்பிப் பிழைத்த டக்ளஸ் தேவானந்தாவினால் இம்முறை தாக்குப் பிடிக்கமுடியாமல் போய்விட்டது.

> புள்ளிவிபர ரீதியாகப் பார்த்தாலும் தமிழ்த்தேசியக் கட்சிகள் பெற்ற வாக்குகளையும் இக்கட்சிகள் மீதான வெறுப்பினால் வாக்களிக்காது விட்ட வாக்குகளையும் ஒன்றாகக் கூட்டினால் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்திருக்கும். எனவே இம்மாற்றத்துக்கான பொறுப்பை தமிழ் அரசியல் தலைவர்களே ஏற்கவேண்டும்.

வடக்கு கிழக்கில் வழமையாக இடம் பெற்றுவரும் காட்சிகளை இத்தேர்தலில் மாற்றிய காரணிகள் எவை? இம்மாற்றத்துக்கு வகைகூறவேண்டிய பொறுப்பாளிகள் யார்? உண்மையில் மக்களின் மனங்களில் மாற்றம் ஏற்பட்டுவிட்டதா? அவர்கள் தமிழ்த்தேசியத்தை விட்டு இலங்கைத் தேசியத்தை மனப்பூர்வமாக ஏற்றுவிட்டார்களா? இம்மாற்றம் நிரந்தரமானதா அல்லது தமிழ் அரசியல்வாதிகளுக்கான எச்சரிக்கையா? இவை போன்ற கேள்விகளுக்கு விடைகளைக் கண்டறிவது தற்போதைய நிலையில் அவசியமானதாக உள்ளது. காட்சி மாற்றத்துக்கான காரணிகள் பலவுள. எனினும் பிரதான காரணிகள் இரண்டு. ஒன்று தமிழ்க் கட்சிகள் மற்றும் தலைவர்கள் மீதான மக்களின் அதிருப்தி. தேசிய மக்கள் சக்தியின் மீதும் அதன் தலைவர்கள் மீதும் பல தரப்புகளிலுமுள்ளவர்க்கு ஏற்பட்ட திடீர் மோகம். இந்த இரண்டு காரணிகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை. ஏனெனில் தமிழ்த் தலைவர்கள்மீதான அதிருப்தி மக்களிடம் வளர்ந்து வந்திருந்த போதிலும் அவர்களை உதறிவிட்டு போகக்கூடிய கவர்ச்சியை முன்னைய ஆட்சியிலிருந்த கட்சிகள் கொண்டிருக்கவில்லை. அதேபோல தேசிய மக்கள் சக்தியைப் போன்று தமிழ் வாக்குகளைக் கவர்ந்திழுக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் காய்களை நகர்த்தியிருக்கவில்லை. கடந்த கால ஆட்சியாளர்கள் தமிழ் அரசியல் தரகர்களூடாக மக்களை அணுக முயற்சித்தனர். ஆனால் தேசிய மக்கள் சக்தி நேரடியாக ஆனால் மறைமுகமாக தனது வலைப்பின்னல்களை தேவையான தளங்களிலுள்ள மக்களிடத்து உருவாக்கிக் கொண்டது. குறிப்பாக கடந்த ஆட்சியாளர்களாலும் அதன் தரகர்களாலும் பாதிக்கப்பட்ட தரப்புகளையும் தமது பிரச்சினைகளைத் தமிழ் தலைவர்கள் சரியானமுறையில் கையாளவில்லை என்ற அதிருப்திக்குள்ளான தரப்புகளையும் அவர்களால் இலகுவாக வளைக்க முடிந்தது. குறிப்பாக ஆசிரியர்கள், வைத்தியர்கள், உட்பட பலதரப்பட்ட அரச பணியாளர்கள், கடற்றொழிலாளர்கள் போன்றவர்களில் கணிசமானவர்களை அக்கட்சி தன்பக்கம் ஈரத்துக் கொண்டது. அதேபோல அனுரகுமார ஜனாதிபதியாக பதவியேற்ற நிகழ்வு தொடக்கம் எளிமை, சிக்கனம், வெளிப்படை, முன்னைய ஊழல் மற்றும் அதிகார முறைகேடுகள் தொடர்பான நடவடிக்கைகள், வடக்கில் அரசியல்சார்பற்ற ஆளுநர் நியமனம் எனப்பல ஜனரஞ்சகமான நடவடிக்கைகளை முன்னெடுத்த தன்காரணமாக பொதுமக்களிடையே புதிய ஆட்சி தொடர்பாக ஏற்பட்ட நல்லெண்ணம் என்பன தேசிய மக்கள் சக்தியின்மீதான மோகத்தை மக்களிடையே அதிகரித்தன.

ஆனால் தமிழ்த் தலைவர்கள் இந்த மாற்றங்கள் எதையும் கருத்திற் கொள்ளாது தமது வழமையான அரசியல் குதிரையில் பயணத்தைத் தொடரும் முயற்சிகளிலேயே ஈடுபட்டனர். தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், இறைமை, தன்னாட்சி, சமஷ்டி, தேசம், ஒற்றையாட்சி, சர்வதேச விசாரணை என்ற வழமையான சொல்லாடல்களுடன் களத்தில் குதித்தனர். இவை எல்லாவற்றையும் உணரும் நிலையில் இல்லாத இளைஞர்கள் உருவாகிவிட்டார்கள் என்பதைக்கூட இவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. இவற்றுடன் புதிதாக நவீன தேசியம், ஆட்புலம், ஆளுமை, மாற்றம் என்ற புதிய கோசங்களும் இணைந்து கொண்டன. பழைய கட்சி, பழைய கொள்கை, பழைய முகங்கள் ஆனால் மாற்றத்துக்கு வாக்களிப்பீர் என்று அறைகூவல். தங்களுக்கான வெற்றியை உறுதிப்படுத்த மட்டும் புதிய முகங்களை இணைப்பது. அதில் பொங்கல் சுவைப்பதற்காக கஜூ, முந்திரி, சேமியா, ஏலம் போடுவதுபோல பழைய முகங்களின் வெற்றிக்காக சாதி, சமயம், பெண் என ஒவ்வொரு வகுதிக்கும் ஒவ்வொருவர். ஒன்றுபடுத்தப்பட்டு பலமாக இருந்த கட்சிகளை குரங்கின் கை பூமாலை போல ஒவ்வொன்றாகப் பிய்த்தெறிந்தது மட்டுமல்லாமல் ஒரு கட்சிக்குள்ளேயே இரு அணிகளை உருவாக்கி சந்திசிரிக்கும் நிலையை ஏற்படுத்திவிட்டு தமிழ்த் தேசியத்துக்காக மக்களே ஒன்று திரளுங்கள் எனக் கோசம் எழுப்பினால் அதையும் நம்புவார்கள் மக்கள் என்று நம்பும் தலைவர்கள். வெற்றிக்கு மக்களைவிடச் சின்னமே முக்கியம் என களவெடுக்கும் தலைவர்கள்.

(14ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை பாராளுமன்றத்துக்கு!

இலங்கை பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்து முடிவுகள் வெளிவந்துவிட்டன. புதிய பாராளுமன்றில் 28 தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த முறை பாராளுமன்றம் செல்கிறார்கள்! இது பாராளுமன்றில் 12 வீத பிரதிநிதித்துவம் என்பது குறிப்பிடத்தக்கது.

10 மாவட்டங்களை பிரதிநிதித்துவம் படுத்தி இவர்கள் செல்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாவட்டங்களை பிரதிநிதித்துவப் படுத்தி 19 அங்கத்தவர்கள் செல்கிறார்கள்.

கொழும்பில் நேரடித் தமிழ் பிரதிநிதித்துவம் இழக்கப்பட்டது துர்ப்பாக்கியமானது என்றாலும், ஐக்கிய மக்கள் சக்தி தனக்கு கிடைத்த தேசியப்பட்டியல் ஆசனத்தில் மனோ கணேசனை பாராளுமன்றம் அனுப்பும் என்று நம்பப்படுகின்றது.

தமிழ் பிரதிநிதிகளில் அதிக விருப்பு வாக்கு பெற்றவர் திருமதி சரோஜா போல்ராஜ் அவர்கள் மாத்தறை மாவட்டத்தில் 148379 வாக்குகளை பெற்று பெரு வெற்றி பெற்றுள்ளார்.

**யாழ்ப்பாணம்**

1. சிவஞானம் சிறீதரன் - தமிழ் அரசு கட்சி
2. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்
3. இராமநாதன் அருச்சுனா - சுயேச்சை
4. இளங்குமரன் - தே.ம.ச.
5. சிறி.பவானந்தராஜா - தே.ம.ச.
6. ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி - தே.ம.ச.

**வன்னி**

7. துரைராசா ரவிகரன் - தமிழ் அரசு கட்சி
8. செல்வம் அடைக்கலநாதன் - ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
9. செல்வத்தம்பி திலகநாதன் - தே.ம.ச.
10. ஆறுமுகம் ஜெகதீஸ்வரன் - தே.ம.ச.

**திருகோணமலை**

11. சண்முகம் குகதாசன் - தமிழ் அரசு கட்சி
12. அருண் ஹேமச்சந்திரா - தே.ம.ச.

**மட்டக்களப்பு**

13. இராசமாணிக்கம் சாணக்கியன் - தமிழ் அரசு கட்சி
14. ஞானமுத்து சிறிநேசன் - தமிழ் அரசு கட்சி
14. இளையதம்பி சிறிநாத் - தமிழ் அரசு கட்சி
16. கந்தசாமி பிரபு - தே.ம.ச.

**அம்பாறை**

17. கவீந்திரன் கோடீஸ்வரன் - தமிழ் அரசு கட்சி

**நுவெரெலியா**

18. பழனி திகாம்பரம் - ஐ.ம.ச.
19. வேலுச்சாமி ராதாகிருஷ்னன் - ஐ.ம.ச.
20. கிருஸ்னன் கலைச்செல்வி - தே.ம.ச.
21. ஜீவன் தொண்டமான் - தே.ம.ச.

**பதுளை**

22. கிட்டினன் செல்வராஜ் - தே.ம.ச.
23. அம்பிகா சாமுவேல் - தே.ம.ச.

**இரத்திரபுரி**

24. எஸ்.பிரதீப் - தே.ம.ச.

**மாத்தறை**

25. சரோஜா போல்ராஜ்- தேமச

**தேசியப் பட்டியல்**

26. இராமலிங்கம் சந்திரசேகரன் (யாழ்ப்பாணம்) - தே.ம.ச.
27. தமிழ் அரசு கட்சி
28. ஐக்கிய மக்கள் சக்தி - மனோ கணேசன் (கொழும்பு) - இன்னமும் உறுதிசெய்யப் படவில்லை.

---




**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** 30 வருடங்கள் தொடர்ந்து யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த டக்ளஸ் தேவானந்தா இந்தத் தேர்தலில் படு தோல்வியடைந்திருக்கிறாரே. அவருக்கு இப்படியொரு தோல்வி ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?.

**வியுக்தியார்:** இந்தத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. கடந்த 2020 பாராளுமன்றத் தேர்தலில் அரச ஆதரவு வேட்பாளர்களாக - அல்லது தேசியக்கட்சிகளின் வேட்பாளர்களாக களம் இறங்கிய டக்ளஸ், அங்கஜன், ஐக்கிய மக்கள் சக்தி, ஐ.தே.க., மற்றும் சந்திரகுமார் ஆகியோர் பெற்ற மொத்த வாக்குகள் அப்படியேதான் இருக்கின்றன. ஆனால் வேறு ஆட்களிடம். அவ்வளவுதான். அதற்கு காரணம் இவர்களுக்கு வாக்களிக்கின்ற சாதாரண மக்களின் அதாவது சாதாரணர்கள், எப்போதும் ஆட்சியாளர்களிடமிருந்து தமக்கு பெறக்கூடியதை பெறவேண்டும் என்று நினைப்பவர்கள். ஆட்சியாளர்களை இவர்கள் மூலம் அணுகலாம் என்று நினைப்பவர்கள். ஆனால் தற்போதைய ஆட்சியாளரான அநுரகுமாரவோ தானே உங்களில் ஒருவன்தான், நானும் ஒரு சாதாரணன்தான் என்று தனது சொல்லிலும் செயலிலும் காட்டியதால், சாமியே நம்மவராக இருக்கும்போது சாமியிடம் போவதற்கு எதற்கு இடையில் இந்த பூசாரிமார் என்று மக்கள் நினைத்தாலேயே அவர்களை கைவிட்டு தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் ஒருமித்து வாக்களித்ததால் ஒரு போனஸ் ஆசனமும் கிடைக்கப்போய் தேசிய மக்கள் சக்திக்கு மூன்று ஆசனங்கள் கிடைத்திருக்கின்றன. அதைவிட முக்கியமானது கடந்த ஐந்து வருடங்களாக அல்ல, கடந்து 30 வருடங்களாக 'தங்கள் ஆள்' அரசில் இந்தபோதிலும் தங்கள் வாழ்க்கையில் எந்த மாற்றமும் வரவில்லை என்ற தமது ஆதங்கத்தையும் டக்ளஸுக்கு இதுவரை வாக்களித்த மக்கள் உணர்ந்ததும் அவரது தோல்விக்கு காரணமாக இருந்திருக்கலாம்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பழை.**

**கேள்வி:** வன்னித் தேர்தல் தொகுதியில் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியவர்களில் அதிகூடிய விருப்பு வாக்குளை ரிஷாத் பதியுதீனும், குறைந்த விருப்பு வாக்குகளை செல்வம் அடைக்கலநாதனும் பெற்றுள்ளனரே. இது எதனைக் காட்டுகின்றது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** நீங்கள் என்ன நினைத்துக்கொண்டு இப்படியொரு கேள்வியைக் கேட்டீர்களோ தெரியவில்லை. ஆனால், ரிஷாத் பதியுதீன் தமது சமூக மக்களை ஒற்றுமையாக வைத்திருக்கிறார் என்பதும், நமது செல்வம் அடைக்கலநாதன் மட்டுமல்ல, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் எல்லோருமே தமிழ் மக்களை எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதை மட்டும்தான் எனக்கு இது காட்டுகின்றது.

---

**எம். கௌதம்,**
**அமிர்தகழி, மட்டக்களப்பு**

**கேள்வி:** மக்கள் முன்பாக வந்து - தேர்தலில் போட்டியிட்டு மக்களால் தான் தெரிவு செய்யப்படாத சூழலில் தேசியப்பட்டியல் மூலமாக பாராளுமன்றம் செல்வதை விரும்பவில்லை என்று தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் எம்பியான எம். ஏ. சுமந்திரன் கூறியுள்ளாரே. அவர் மக்களின் முடிவுக்கு இவ்வளவு நேர்மையாக இருப்பார் என்று நீங்கள் நம்பியிருந்தீர்களா?

**வியுக்தியார்:** அவர் இப்படிச் சொல்வார் என்று நிச்சயமாக நம்பியிருந்தேன். ஆனால் பின்னர் எப்படியும் தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்வார் என்று இப்போதும் நம்பிக்கொண்டிருக்கின்றேன் என்பதையும் சொல்லியாகவேண்டும். அவர் இப்படி பலதடவைகள் சொன்னதை சொன்னபடி செய்யவில்லை என்பது உங்களுக்கும் எனக்கும் தெரிந்ததால் தான் உங்களுக்கு இப்படியொரு கேள்வியே எழுந்திருக்கின்றது. தேசியப்பட்டியல் ஊடாக பாராளுமன்றம் செல்வதை விரும்பவில்லை என்றுதான் கூறியிருக்கின்றாரே தவிர, போகமாட்டேன் என்று கூறவில்லை என்பதையும் நீங்கள் கவனித்திருப்பீர்கள். அரசியலுக்கு வந்துவிட்டால், நேர்மை, வாய்மை மட்டமல்ல, மானமும் இருப்பதில்லைத்தானே.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்சாகமாக வாக்களித்த மக்களில் அண்ணளவாக ஐம்பதாயிரம் பேர், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்களிக்கவில்லையே. இது எதனால் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** தாங்கள் விரும்பிய ஜனாதிபதி வேட்பாளர் ஆட்சிக்கு வந்தால், தமது வாழ்க்கையிலும் மாற்றங்கள் வரலாம் என்று நம்பியிருப்பார்களோ என்னவோ. ஆனால் பாராளுமன்ற தேர்தலில் தமிழ் கட்சிகளிடையே ஒருவரை ஒருவர் அடித்துக்கொண்டது மட்டுமல்ல, தமிழ் அரசு கட்சிக்குள்ளேயே, ஒருவரையொருவர் அடித்துக்கொண்டதும், அதிலும் உச்சமாக மது பானச்சாலைகளுக்கான அனுமதியைப் பெற்ற சிலர் தமது கட்சியில் இன்னமும் இருப்பதாகவும் அவர்களும் கட்சியைவிட்டு வெளியேறவேண்டும் என்று சுமந்திரன் பகிரங்கமாக அறைகூவல் விடுத்ததும், அந்தக் கட்சியின் மீதே மக்களின் கோபம் திரும்பியிருக்கின்றது என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டியிருக்கின்றன. தேர்தல் முடிவுகளை கவனித்தால், அதில் தமிழ் அரசு காரர்கள் தமது கட்சிமீது ஏற்பட்ட கோபத்தில் வாக்களிக்கவே இல்லை என்றுதான் தோன்றுகின்றது. கடந்த நல்லாட்சி காலத்தில் தமிழ் அரசு மீது ஏற்பட்ட கோபத்தில் முன்னணியினருக்கு வாக்களித்த தமிழ் அரசுக்காரர்கள், இப்போது அவர்கள் மீதும் நம்பிக்கை இழந்துவிட்டதையே முடிவுகள் காட்டுகின்றன.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** மலையக அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக மலையக சமூகத்தை சேர்ந்த இரு பெண்கள் பாராளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளரான கலைச்செல்வி 33 ஆயிரத்து 346 விருப்பு வாக்குகளை பெற்று வெற்றி பெற்றார். இதேவேளை

பதுளை மாவட்டத்தின் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அம்பிகா சாமுவேல் 58 ஆயிரத்து 201 வாக்குகளை பெற்று வெற்றி பெற்றுள்ளார். ஆனால் வடக்கு கிழக்கில் இருந்து பெண்கள் எவரும் தெரிவாக வில்லையே இது ஏன் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இதில் நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. வடக்கு கிழக்கில் இன்னமும் தமிழர்கள் திருந்தவில்லை என்பதைத்தான் வெளிக்காட்டுகின்றது. வடக்கு கிழக்கில் வாக்களித்த பெண் வாக்காளர்கள் ஒவ்வொருவரும் தாம் வாக்களித்த கட்சியில் இருந்த பெண் வேட்பாளர்களுக்கு தமது விருப்பு வாக்கை அளித்திருந்தாலே ஒவ்வொரு கட்சியிலும் பெண்கள் தான் தெரிவாகியிருப்பார்கள். அதைவிட முக்கியமானது, அவர்கள் தேசியக் கட்சிகளில் போட்டியிட்டபோது அவர்களுக்கு மூன்று இனத்தையும் சேர்ந்தவர்கள் வாக்களித்திருப்பதையும் பாராட்டவேண்டும்.

---

**எஸ். செந்துஜன்,**
**ராசவீதி, கோப்பாய்.**

**கேள்வி:** வன்னியில் போட்டியிட்ட முன்னாள் போராளிகளில் ஒருவராவது தெரிவுசெய்யப்படுவார் என்று நம்பியிருந்தேன். அதிலும் குறிப்பாக வன்னியில் போட்டியிட்ட பெண் போராளி வெற்றிபெறுவார் என்று நம்பியிருந்தோம். ஆனால் அவர் கூட தெரிவாக வில்லை. முன்னாள் போராளிகளை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** வன்னியில் சங்கு சின்னத்தில் போட்டியிட்ட பெண் போராளி, யுத்தத்தில் ஒரு காலை இழந்தவர். தடுப்பு முகாமில் இருந்தபோது அங்கிருந்தவர்களிடம் படித்து அங்கே இருந்தபோதே உயர்தர பரீட்சைக்கு தேற்றி சித்தியடைந்து, பல்கலைக்கழகம் தெரிவானவர். பின்னர் பட்டம் பெற்று அரச பணியில் இருப்பவர். அவர் பாராளுமன்றம் சென்றிருந்தால், நமது போராட்டத்தின் அடையாளமாக பாராளுமன்றத்தில் அவரது குரல் ஒலித்திருக்கும். ஆனால் அவர்போட்டியிட்ட கட்சிக்கு இருபதாயிரத்திற்கும் அதிகமான வாக்குகள் கிடைத்திருக்கின்றபோதிலும் அதில் போட்டியிட்ட செல்வம் அடைக்கலநாதன் ஆறாயிரத்திற்கும் குறைவான விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருக்கிறார். அப்படியெனில் அந்த பெண் போராளி அதைவிட குறைவான விருப்பு வாக்குகளையே பெற்றிருக்கிறார். இது ஒரு செய்தியை தெளிவாக சொல்லியிருக்கின்றதுதானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரான் மீது சவூதி அரேபியா திடீர் கரிசனம்: மாறுபட்ட புதிய சூழலில் அரபு நாடுகளின் கூற்றை டிரம்ப் கேட்பாரா?



சவூதி அரேபியாவும் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் ஈரானுடனான மோதல் போக்கை குறைக்க வேண்டும் என விரும்புகின்றன.

அமெரிக்கா - ஈரானுடனான உறவுகளை மேம்படுத்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை சமாதானப்படுத்தப்படுத்த முடியும் என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

ஈரானுடனான சவூதி அரேபியாவின் உறவு பதற்றமாகவே உள்ளது. ஆனால் அரபு நாடுகள், டிரம்ப் தனது இரண்டாவது முறை பதவிக்காலத்தில் ஈரான் மீது சுமூகமான போக்கை கொண்டிருக்க வேண்டும் என்றும், காஸா மற்றும் லெபனானில் நடந்து வரும் ராணுவ நடவடிக்கையை முடிவுக்கு கொண்டுவர இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் விரும்புகின்றன.

ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே நீண்ட காலமாக கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், கடந்த ஆண்டு சீனா மத்தியஸ்தம் செய்த பிறகு, ஈரான் மீதான சவூதி அரேபியாவின் அணுகுமுறை மாறிவிட்டது.

ஈரானுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை அமெரிக்கா சுமூகமாக்க வேண்டும் என்று சவூதி அரேபியா விரும்புகிறது.

சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில் செவ்வாய்கிழமை நடைபெற்ற அரபு இஸ்லாமிய நாடுகளின் உச்சி மாநாட்டில், ஈரான் மீதான இஸ்ரேலின் ஏவுகணை தாக்குதல் குறித்து பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் விமர்சித்து பேசியுள்ளார்.

ஈரானின் இறையாண்மை மதிக்கப்பட வேண்டும் என்று சவூதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் கூறினார்.

டிரம்ப் தனது கடந்த பதவிக்காலத்தில் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை முடித்துக் கொண்டார், மேலும் அதன் மீது பல தடைகளையும் விதித்தார்.

சமீபத்தில், ஹெஸ்பொலா மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் இஸ்ரேலிய தாக்குதலில் இறந்ததை அடுத்து இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஏவுகணைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

திங்கட்கிழமையன்று அபுதாபியில் நடைபெற்ற மாநாட்டில், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அதிபரின் ஆலோசகர் அன்வர் கர்காஷ் கூறும் போது, "டிரம்ப் நிர்வாகத்துடன் ஒரு முழுமையான அணுகுமுறையை கட்டமைக்க வேண்டிய அவசியம் உள்ளது" என்றார்.

2017-ல் டிரம்ப் அதிகாரத்திற்கு வரும் போது கவலையில்லாமல் இருந்த சவூதி அரேபியாவும், ஐக்கிய அரபு எமிரேட்ஸும் தற்போது எச்சரிக்கையுடன் இருப்பதாக பார்க்கப்படுகிறது.

உறுதியற்ற தன்மை, உலகளாவிய விவகாரங்களில் ஒதுக்கப்படுவது போன்ற அமெரிக்காவின் கொள்கைகள் குறித்த அச்சங்கள் அரபு நாடுகளிலும் அதிகரித்துள்ளது.

2018-ம் ஆண்டு, ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தை டிரம்ப் முறித் துக் கொண்டபோது, சவூதி அரேபியா வும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் மகிழ்ச் சியை வெளிப்படுத்தின. அணுசக்தி ஒப்பந்தத்தை முறித்துக் கொண்ட பிறகு ஈரான் மீது கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தார் டிரம்ப்.

ஆனால், இந்த முறை ஈரானுக்கு எதிராக டிரம்ப் எடுக்க நினைக்கும் கடுமையான நிலைப்பாட்டை சவூதியும் ஐக்கிய அரபு எமிரேட்ஸும் ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை.

ஈரான் விவகாரத்தில் அரபு நாடுகள்



சொல்வதை டிரம்ப் கேட்பாரா?

ஐநாவுக்கான அமெரிக்க தூதராக எலைஸ் ஸ்டெஃபானிக்-கை டொனால்ட் டிரம்ப் நியமித்துள்ளார்.

ஈரானுக்கு அதிகபட்ச அழுத்தத்தை கொடுக்கும் பிரசாரத்திற்கு அமெரிக்கா தயாராக இருப்பதாக எலைஸ் ஸ்டெஃபானிக், எக்ஸ் தள பதிவில் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர், "நீண்ட காலமாக, பைடன்- ஹாரிஸ் நிர்வாகத்தின் பல வீனம் காரணமாக எங்கள் எதிரிகள் தைரியமாகிவிட்டனர். அதிபர் டிரம்ப் திரும்பிய உடன், வலிமை மூலம் அமைதி திரும்பியுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் தொடர்பாக டிரம்ப் மீது அரபு நாடுகள் அழுத்தம் கொடுக்க முயற்சித்தாலும், அது டிரம்பிற்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்துவதாக தெரியவில்லை.

இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதராக ஆகன்சா மாகாணத்தின் ஆளுநர் மைக் ஹக்கபீ-யை நியமிப்பதாக அறிவித்ததன் மூலம், இஸ்ரேல் தொடர்பான தனது நிலைப்பாடு என்னவாக இருக்கும் என்பதை டிரம்ப் சுட்டிக்காட்டியுள்ளார்.

டிரம்ப் கடந்த முறை அதிபராக இருந்த காலத்தில் இஸ்ரேலுக்கு முழு ஆதரவை அளித்தார். டொனால்ட் டிரம்ப் அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற உடனேயே இந்த மாநாட்டை அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள் ஏற்பாடு செய்திருக்கிறது. இதன் மூலம், காஸா மற்றும் லெபனானில் நடக்கும் பிரச்னைகளை விரைவில் நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு அறிவுறுத்த அமெரிக்கா மீது அழுத்தம் கொடுக்க விரும்புகின்றன.

இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதராக நியமிக்கபட்பட்டுள்ள ஹக்கபீ, இஸ்ரேலின் தீவிர ஆதரவாளர். ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் யூத குடியிருப்புகள் நிறுவப்படுவதை அவர் ஆதரிக்கிறார்.

காஸா மற்றும் லெபனான் மீது நடக்கும் இஸ்ரேலிய நடவடிக்கைகள் மற்றும் மத்திய கிழக்கில் அமைதியை மீட்டெடுப்பது குறித்து டிரம்ப் என்ன செய்ய முடியும் என்பதற்கு இது ஒரு அறிகுறியாகும்.

ஹக்கபீயின் நியமனத்தை தனது ட்ரூத் சமூக ஊடக தள பதிவில் அறிவித்த டிரம்ப், "அவர் (ஹக்கபீ) இஸ்ரேலையும் இஸ்ரேலிய மக்களையும் நேசிக்கிறார். இஸ்ரேலியர்கள் அவரை நேசிக்கின்றனர். மத்திய கிழக்கில் அமைதியை ஏற்படுத்த மைக் ஹக்கபீ அயராது உழைப்பார்" என்று குறிப்பிட் டார்.

இஸ்ரேலின் ஆதரவாளரும், கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்தவருமான ஹக்கபீ, 2008-ம் ஆண்டுக்குப் பிறகு இஸ்ரேலுக்கான முதல் யூதர் அல்லாத அமெரிக்கத் தூதராக இருப்பார்.

2008-ல் அப்போதைய அமெரிக்க அதிபர் ஜார்ஜ் டபிள்யூ புஷ், இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதராக யூதர் அல்லாத ஜேம்ஸ் கன்னிங்காமை நியமித்தார்.

**டிரம்ப் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பாரா?**

2025 ஜனவரியில் டிரம்ப் ஆட்சி பொறுப்பை கையிலெடுப்பதற்கு முன்பே ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை நாட்டுடன் இணைக்க வேண் டிய ஆயத்தப் பணிகளைத் தொடங்கு மாறு இஸ்ரேலின் தீவிர வலதுசாரி தலைவரும் நிதி அமைச்சருமான பெசலெல் ஸ்மோட்ரிச் இரண்டு நாட்க ளுக்கு முன்பு கூறியிருந்தார்.

திங்களன்று நடைபெற்ற தீவிர வலதுசாரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் டிரம்பின் தேர்தல் வெற் றியை வரவேற்று பேசினார் ஸ்மோட்ரிச்.

மேலும், இஸ்ரேலுடன் பகுதிகளை இணைப்பதற்கான கள ஆய்வுகளை தயாரிக்கத் தொடங்குமாறு அதிகாரிகளிடம் அறிவுறுத்தியுள்ளார்.

டிரம்ப் தனது கடந்த கால பதவிக்காலத்தில் தைரியத்தையும் உறுதியையும் வெளிப்படுத்தியதைப் போலவே, தனது இரண்டாவது பதவிக்காலத்திலும் இஸ்ரேலின் நடவடிக்கையை ஆதரிப் பார் என்பதில் சந்தேகமில்லை என்று ஸ்மோட்ரிச் கூறினார்.

டிரம்ப் தனது கடந்த பதவிக்காலத்தில், ஜெருசலேமை இஸ்ரேலின் தலைநகராக அங்கீகரித்து, அமெரிக்க தூதரகத்தை இஸ்ரேலின் டெல் அவீவ் நகரில் இருந்து ஜெருசலேமிற்கு மாற்றினார்.

கோலான் குன்றை இஸ்ரேல் ஆக்கிரமித்ததையும் அவர் அங்கீகரித்தார். இது இஸ்லாமிய நாடுகளை கோபப்படுத்தியது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரைப் பகுதிகளை இஸ்ரேலுடன் இணைப்பது குறித்த ஸ்மோட்ரிச்சின் கருத்துக்கு ஒரு நாள் கழித்து, டிரம்ப் மைக் ஹக்கபீ-யை இஸ்ரேலுக்கான அமெரிக்க தூதராக நியமித்திருக்கிறார். இதன் மூலம் தனது எண்ணத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் டிரம்ப். இதிலிருந்து இஸ்ரேலுக்கான அவரின் ஆதரவு பழையபடி தொடரும் என்று தெரிகிறது.

மேற்குக்கரை இணைப்பு தொடர்பாக இஸ்ரேல் நிதியமைச்சர் தெரிவித்த கருத்துக்கு கட்டார் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

ஸ்மோட்ரிச் கருத்துக்கு எதிராக கட்டார் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையை இணைக்க தேவையான உள்கட்டமைப்புகளை தயார் செய்யுமாறு உத்தரவிட்டுள்ள இஸ்ரேலிய நிதியமைச்சரின் கருத்தை கட்டார் வன்மையாகக் கண்டிக்கிறது. இது சர்வதேச சட்டம் மற்றும் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானம் 2334 ஆகியவற்றின் அப்பட்டமான மீறலாகும். இது இந்த பகுதியில் அமைதிக்கான வாய்ப்புகளை கடுமையாக பாதிக்கலாம்." என்று குறிப்பிட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலின் இறையாண்மை குறித்து பேசிய இஸ்ரேல் அமைச்சரின் கருத்துக்கு சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபோன்ற கருத்துக்கள், இரு நாடுகளுக்கும் இடையே சமரச தீர்வுகளை அமல்படுத்தி அமைதியை நிலைநாட்டும் மற்ற முயற்சிகளை பலவீனப்படுத்துவதாக சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிரம்பின் கடந்த பதவிக் காலத்தில், அரபு உலகம் முற்றிலும் மாறுபட்ட சூழ் நிலையில் இருந்தது. ஆனால், அவரது இரண்டாவது பதவிக்காலத்தில், விஷயங்கள் வேகமாக மாறிவிட்டன. டிரம்ப் தனது கடந்த பதவிக்காலத்தில் மேற்கொண்ட முதல் வெளிநாட்டுப் பயணம் சவூதி அரேபியா. அந்தப் பயணம் அவரது முன்னுரிமைகள் என்ன என்பதை சுட்டிக்காட்டியது.

ஆனால், இப்போது அரபு நாடுகள் தங்கள் முன்னுரிமைகளை தீர்மானிக்கின்றன, இவை டிரம்பின் முன்னுரிமைகளுடன் முரண்படலாம்.

ரியாத்தில் நடந்த அரபு இஸ்லாமிய நாடுகளின் மாநாடு இந்த முயற்சிக்கு சான்றாக கருதப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம நீதியரசர் நியமனத்துக்கு அரசமைப்பு சபை அங்கீகாரம்!

கொழும்பு, நவ. 17

பிரதம நீதியரசராக முர்து நிருபா பிதுஷினி பெர்னாண் டோவை நியமிப்பதற்கான பரிந்துரையை அரசமைப்பு சபை அங்கீகரித்துள்ளது.

பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிருபா பிதுஷினி பெர் னாண்டோ ஒக்ரோபர் 10ஆம் திகதி பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

அவர் கொழும்பு பல்கலைக் கழகத்தின் சட்டப் பட்டதாரி ஆவார்.

1985 ஆம் ஆண்டு சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்ட அவர் 1997 ஆம் ஆண்டு பிரதி சொலி சிற்றர் ஜெனரலாகவும் 2014 ஆம் ஆண்டு மேலதிக சொலி சிற்றர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார். (எ)

தேர்தல் சட்டத்தை மீறிய

# 18 வேட்பாளர்கள் உட்பட 581 பேர் கைதாகினர்

கொழும்பு, நவ. 17

பாராளுமன்றத் தேர்தலுக்கு முந்திய காலப்பகுதியில் தேர் தல் சட்டத்தை மீறிய 18 வேட் பாளர்கள் உட்பட 581 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச் சாளர் நிஹால் தல்துவ தெரி வித்தார்.

இதேவேளை, நாட்டின் எந் தப் பகுதியிலும் பெரும் வன் முறைகள் எதுவும் பதிவாக வில்லை என்றும் அவர் கூறி னார்.

இதுவரை கைது செய்யப் பட்ட 581 பேரில் 18 வேட்பா ளர்கள் உள்ளனர். மீதமுள்ள வர்கள் அவர்களின் ஆதரவாளர் கள் எனவும் அவர் தெரிவித் தார். (எ)

# பஸ் - மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் படுகாயம்



கேகாலை, நவ. 17

கேகாலை, ரம் புக்கனை நகரத் துக்கு அருகில் இடம்பெற்ற விபத் தில் ஒருவர் படுகா யமடைந்துள்ளார்.

இந்த விபத்து நேற்றுச் சனிக் கிழமை காலை இடம்பெற்றது.

பேருந்து ஒன்று வீதியில் பயணித்த மற்றுமொரு வாகனத்தைக் கடந்து முன்னோக்கிச் செல்ல முயன்ற போது எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றது.

இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளை செலுத் தியவர் படுகாயமடைந்த நிலை யில் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள் ளார். (எ)

# உள்நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது

கொழும்பு, நவ. 17

கொடவெஹெர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அஹூ பொடகம பிரதேசத்தில், உள் நாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (எ)

# குடு லொக்கா ஹெரோயினுடன் கைது


அநுராதபுரம், நவ. 17

அநுராதபுரம், மடாட்டுகம, கெக்கிராவ பிரதேசத்தில் பிர பல போதைப்பொருள் கடத் தல்காரரான "குடு லொக்கா" என்பவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே குடு லொக்கா கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 3, 220 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 02 தொலைபேசிகள் உள்ளிட்ட பல் வேறு பொருட்கள் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

# மக்களுக்கு நன்றி தெரிவித்தார் எம். பியாக தெரிவான தாஹிர்



கல்முனை, நவ. 17

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் அம்பாறை - திகா மடுல்ல தேர்தல் மாவட்டத்தில் ஓர் ஆசனத்தைப் பெற்றுக் கொள்வதற்காக உழைத்த பத்து வேட்பாளர்களுக்கும் கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், ஆதர வாளர்கள் அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றேன் என்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு தெரிவு செய்யப்பட்ட அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தேர்தலில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் போட்டி யிட்டு வெற்றி பெற்ற பின்னர் வெள்ளிக்கிழமை இரவு பொது மக்களால் ஒழுங்கு செய்யப் பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். (எ)

# "தேசிய பட்டியலை எனக்கு வழங்கவும்"

வவுனியா, நவ. 17

இலங்கை தமிழ் அரசுக் கட் சிக்கு கிடைத்துள்ள தேசிய பட்டியல் ஆசனத்தை வடக்கி லுள்ள இந்திய வம்சாவளி மக்க ளைப் பிரதிநிதித்துவப்படுத்தி தனக்கு வழங்குமாறு வட மாகாண சபை முன்னாள் உறுப் பினர் எம். பி. நடராஜா, அந்தக் கட்சியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

எம். பி. நடராஜா ஆகிய நான் இலங்கை தமிழ் அரசுக் கட்சியில் அங்கத்துவம் பெற்ற உறுப்பினர். 1995ஆம் ஆண்டு தொடக்கம் இக்கட்சியுடன் இணைந்து பயணித்துள்ளேன். 2005இல் இக்கட்சியின் வவு னியா மாவட்ட கிளையின் செயலாளராகவும் கடமை யாற்றினேன்.

2013ஆம் ஆண்டு நடை பெற்ற வடமாகாண சபை தேர் தலில் எமது கட்சியில் போட்டியிட்டு 10, 800 வாக்குக ளைப் பெற்றதுடன் சுழற்சி முறையில் வட மாகாண சபை யின் உறுப்பினராகவும் கடமையாற்றினேன்.

2018 ஆம் ஆண்டு நடை பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வடக்கு - கிழக்கு வாழ் மலையக தமிழ் மக்கள் சார்பாக மீன் சின்னத்தில் போட்டியிட்டு கிடைத்த 2ஆசனங்களின் ஒத்துழைப்பின் மூலம் எமது கட்சி வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபை யில் ஆட்சி அமைத்ததனை தாங்கள் அறிவீர்கள்.

வடக்கில் வாழ்கின்ற சுமார் 2, 00, 000 மலையக மக்கள் சார் பாக இம்மக்களை பிரதி நிதித் துவப் படுத்துவதற்கு ஒரு பாரா ளுமன்றப் பிரதிநிதித்துவம் தேவை என்பதனை தாங்கள் அடிக்கடி வலியுறுத்தியும் வந்துள்ளீர்கள். அவ்வகையில் 2024 பாராளுமன்றத் தேர்தலில் எமது கட்சிக்கு கிடைத்துள்ள தேசிய பட்டியல் ஆசனத்தை வடக்கில் வாழ் கின்ற மலையக மக்கள் சார்பாக எனக்கு தந்து தவுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (எ)

# மாறாத தமிழ் அரசியல்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோருமே போலித் தமிழ்த் தேசியவாதம் பேசிக்கொண்டு அடுத்த வரைப் போலித் தேசியவாதியாகச் சித்தரிக்க முனைதல். நமது தலைவர் கள் இப் படியே குண்டுச் சட்டிக்குள் தொடர்ந் தும் குதிரையோட எண்ணி னார்களே யன்றி தென்பகுதியில் ஏற்பட்ட மாற் றத்தை கவனிக்கத் தவறி விட்டனர். மூன்று சதவீத மக்கள் ஆதர வுடன் இருந் தவர்கள் தங்களை அசைக்க முடியாது என்ற இறுமாப்பி லிருந்தவர்களை 45 வீதத்திற்கும் மேலான ஆதரவுபெற்று அதிகாரத்தி லிருந்து அகற்றினார்கள் என்பதையோ, பழைய அரசியல் தலை வர்கள் பலர் அரசியலிலிருந்து ஒதுங்கிக் கொண் டதையோ, தென்பகுதி அரசியல் அலை வடபகுதிக்கும் நகரும் வாய்ப்பு ஏற்படலாம் என்பதையோ இத்தலை வர்கள் எவரும் உணரும் நிலையில் இருக்கவில்லை. உணர்ந்து கொண்டா லும் அவர்கள் தங்களை மாற்றிக்கொள் ளும் நிலையிலுமில்லை. அதனால் மக் களில் கணிசமானோர் தங்களை மாற்றிக் கொண்டார்கள் என்பதே உண்மை.

மக்களில் ஏற்பட்ட இம்மாற்றம் அவர்கள் தமிழ்த் தேசியத்தை உதறி விட்டார்கள் என்பது கருத்தன்று. சென்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித்துக்கோ அல்லது ரணிலுக்கோ அளித்த வாக்கு கள், அல்லது கடந்த பாராளுமன்றத் தேர்தல்களில் டக்ளஸ், அங்கஜனுக்கு அளித்த வாக்குகள் எப்படித் தமிழ்த் தேசியத்துக்கு எதிரா னதாக இல்லையோ அதேபோலத்தான் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கு விழுந்த வாக்குகள். புள்ளிவிபர ரீதி யாகப் பார்த்தாலும் தமிழ்த்தேசியக் கட்சிகள் பெற்ற வாக்குகளையும் இக்கட்சிகள் மீதான வெறுப்பினால் வாக்களிக்காது விட்ட வாக்குகளை யும் ஒன்றாகக் கூட்டினால் தேசிய மக்கள் சக்திக்கு ஒரு ஆசனம் மட்டுமே கிடைத்திருக்கும். எனவே இம்மாற்றத் துக்கான பொறுப்பை தமிழ் அரசியல் தலைவர்களே ஏற்கவேண்டும். இந்த மாற்றம் தற்காலிகமானதா அல்லது நிரந்தரமானதா என்பது தமிழ்த்தலை வர்களின் சிந்தனை மாற்றத்திலும் புதிய அரசாங்கத்தின் முன்னெடுப்பு களிலுமே தங்கியுள்ளது. தமிழ்த் தலைவர்கள் தங்களை மாற்றவில்லை எனில் ஏற்பட்ட மாற்றம் நிரந்தரமா கும். அரசாங்கம் தமிழ் மக்களுக்கான நியாயமான தீர்வை முன்வைக்காவிடில் மாற்றம் தற்காலிகமாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தேசியப்...

தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மாவை சேனாதிராசாவை நியமிக்கவேண்டுமென கட்சிக்குள் ஒரு தரப்பு கோரிக்கை விடுத்துள்ளது. இலங்கை தமிழ் அரசு கட்சியையும், தமிழ் தேசியக் கட்சிகளையும் ஒற்று மைப்படுத்தக்கூடிய- அனுபவமுள்ள- தலைவரான அவர், பாராளுமன்ற உறுப்புரிமையை பெறவேண்டுமென அந்தத் தரப்பு கோரியுள்ளது. (அ)

### முக்கிய...

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர் பாக புதிதாக தொடங்கப்பட்டுள்ள விசாரணைகளின்படி, முன்னாள் பாதுகாப்புத் தலைவர் மற்றும் அரசியல் கட்சித் தலைவர் ஒருவரும் விரைவில் கைது செய்யப்படவுள்ளதாக உயர் மட்ட பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி விக்கின்றன.

பிரித்தானியாவின் சனல்-4 அலை வரிசை ஊடாக அண்மையில் இது தொடர்பில் வெளிப்படுத்திய ஹன்சீர் ஆசாத் மௌலானா, அது தொடர்பான 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக மீண் டும் சாட்சியம் அளிப்பதாகவும், நீதிமன்ற உத்தரவின் பேரில் சந்தேக நபர் கள் கைது செய்யப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனல்-4 நிகழ்ச்சி குறித்து, உயர் நீதி மன்ற முன்னாள் நீதிபதி எஸ்.ஐ.ஜனாப் இமாம் தலைமையில் ஆணைக்குழு நிய மிக்கப்பட்டு சிறப்பு அறிக்கையும் வழங் கப்பட்டுள்ளது.

ஆனால், விசாரணைக் குழுவின் முன்பாக சாட்சியமளிக்குமாறு ஆசாத் மௌலானா கோரப்பட்டிருந்ததுடன், தற்போது வெளிநாடு ஒன்றில் உள்ள அவர் விசாரணையில் பங்கேற்கவில்லை - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

### தமிழ் தேசிய...

அவர் அதில் மேலும் தெரிவிக்கை யில்-

உடைந்துபோயுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மீளுருவாக்கவேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்கு நான் இப்போதும் தயாராக இருக்கிறேன். தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒன்றி ணைத்து ஓரணியாகப் பயணிப்பது எமக் குப் பெரும் பலம். அதற்கான முயற்சி களை எதிர்காலத்தில் செய்யவுள்ளேன்.

மக்கள் இம்முறை எம்மீது கொண்ட ஒரு அதிருப்தியின் காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்திருக்கி றார்கள். அதற்கான பொறுப்பை நான் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். மக்கள் எம்மீது அதிருப்தி ஏற்படுவதற்கான காரணங்களை கண்ட றிந்து எதிர்காலத்தில் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேசிய மக்கள் சக்தியின் கொள்கை களை எமது மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்பதை என்னால் ஏற்க முடியாது. எமது மக்கள் அப்படியான வர்கள் அல்லர். எம்மீதான அதிருப்தி யின் வெளிப்பாடே இது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சி இம் முறை தனித்து தேர்தலில் போட்டி யிட்டு அதிகளவாக 8 ஆசனங்களைக் கைப்பற்றி இருக்கிறது.

கிழக்கில் தமிழரசு அமோக வெற்றி யீட்டிய அதேவேளை நாம் வடக்கில் படுதோல்வி கண்டுள்ளோம். இது எமக்கு நல்ல படிப்பினை. எங்களுக்குள் மோதிக்கொண்டிருக்காமல் மக்களுக் கான அரசியலை நாம் முழுவீச்சுடன் செய்யவேண்டும் என்பதை இது உணர்த்தியிருக்கிறது. எதிர்காலத்தில் அதனைச் செய்வோம்.

எமது கட்சியின் தேசிய பட்டியல் ஆசனத்துக்காக மாவை சேனாதிராசா உட்பட பலரது பெயர்கள் முன்மொழி யப்பட்டுள்ளன. அது தொடர்பில் நாளை(இன்று) நடைபெறும் உயர்மட் டக் கூட்டத்தில் முடிவு எட்டப்படும்- என்றார். (அ)

### புதிய...

பணிகளை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்கும்.

இந்த அமைச்சரவை அதிகபட்சமாக 25 அமைச்சர்களைக் கொண்டதாக இருக்கும். அதிகபட்சமாக 25 பிரதி அமைச்சர்கள் நியமிக்கப்பட உள்ளனர்- என்றார். (அ)

### அரசியலில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலில் நாம் எதிர்பார்த்த வெற்றி எமக்கு கிடைத்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்த தில் எமக்கு எதுவும் பிரச்னையில்லை. புதியவர்களுக்கும் இடமளிக்கவேண் டும்.

தேசிய மக்கள் சக்தியை தேர்தலில் வெற்றி பெற செய்தவர்கள் இந்த நாட்டு மக்கள். நாங்கள் மக்களின் தீர்மானத் திற்கு மதிப்பளிக்கின்றோம்.

புதிய அரசாங்கம் ஆட்சி அமைத்தா லும் எமது ஆட்சிக்காலத்தில் முன்னெ டுக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப் படும் என நம்புகின்றோம்.

புதிய அரசாங்கத்தில் அரசியல் பழி வாங்கல்களுக்கு சந்தர்ப்பம் இல்லை என்றே நினைக்கின்றேன்.

கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக கலந்துரையாடி வருகின் றோம்.

அதேபோல் அரசியலில் இருந்து விலகுவதற்கு இதுவரை எந்த தீர்மா னங் களும் மேற்கொள்ளப்படவில்லை - என் றார். (அ)

### வடக்கு...

பாராளுமன்றத் தேர்தலில் எமக்கு கிடைக்கப் பெற்ற மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைவிடவும் வடக்கில் இரு தேர்தல் மாவட்டங்களை யும் வென்று தமிழ் மக்களின் நம்பிக் கையை வென்றது பெரும் பலமாகும். அந்த நம்பிக்கையை நிச்சயம் நாம் பாதுகாப்போம்.

நாம் மூன்றிலிரண்டு பெரும்பான் மைப் பலத்தை எதிர்பார்க்கவில்லை. எனினும் மக்கள் வழங்கிவிட்டனர். அதிகாரத்தை தவறாக பயன்படுத்தாமல், மக்கள் வழங்கிய பொறுப்பை நிச்சயம் முறையாக நிறைவேற்றுவோம். மக்கள் வழங்கிய ஆணை மகிழ்ச்சியாக உள்ளது - என்றார். (அ)

### புதிய...

21ஆம் திகதி நடைபெறவுள்ளது.

நிலையியற் கட்டளைகளின்படி, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர் உள் ளிட்ட முக்கிய பதவிகளுக்கு பாராளு மன்ற ஆரம்ப நாளிலேயே உறுப்பி னர்களை நியமிக்கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

### அரசுக்கு...

சமூக ஊடகப் பதிவில் அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

நெருக்கடியில் இருந்து மீள்வதற் காக, சர்வதேச நாணய நிதியத்துடன், ஒரு சிறந்த ஒப்பந்தத்திற்காக பேச்சு வார்த்தைகளை மேற்கொள்ள வேண் டும்.

பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களை, அதன் பிடியில் இருந்து மீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம் முன்வைக் கப்படவேண்டும்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் சிறு பான்மை தமிழர்கள் முஸ்லிம்களுக் கான உரிமைகள் வழங்கப்பட வேண் டும்.

ஊழலுக்கு எதிராக கடுமையான போராட்டம்.

சுற்றுலாத்துறையில் பசுமை பொரு ளாதாரத்தை உருவாக்க வேண் டும் என எரிக் சொல்ஹெய்ம் அதில் மேலும் குறிப் பிட்டுள்ளார். (அ)

## ஆசிய அபிவிருத்தி வங்கி 50 மில்லியன் டொலர் கடன்!

கொழும்பு, நவ. 17

இலங்கைக்கு 50 மில்லியன் டொலர் கடனுதவி வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சூரிய சக்தி மின் திட் டத்தைச் செயல்படுத்துவதற்காக இந்த கடனுதவியை வழங்குவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதற்காக இலங்கையின் 10 நிதி நிறுவனங்களுடன் இணைந்து குறைந்த வட்டியில் கடன் வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

## வெளிநாட்டு பணவனுப்பல் 3.9 சதவீதத்தினால் அதிகரிப்பு!

கொழும்பு, நவ. 17

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடத்தின் முதல் 10 மாதங்களில் வெளிநாட்டு பணவனுப்பல் 3.9 சதவீதத் தினால் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

கடந்த வருடத்தில் ஜனவரி முதல் ஒக்டோபர் மாதம் வரை வெளிநாட்டு பணவனுப்பல் 1,588.2 பில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

அதற்கமைய இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களில் வெளிநாட்டு பண வனுப்பல் 1,650 பில்லியன் ரூபாவாக பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (அ)

## கடற்படை சிப்பாய் விபத்தில் மரணம்

திருமலை, நவ. 17

திருகோணமலை - ஈச்சிலம்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிச்சேனைப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத் தில் கடற்படை வீரர் ஒருவர் உயிரிழந் துள்ளதாகவும் மற்றுமொருவர் காயம டைந்துள்ளதாகவும் ஈச்சிலம்பற்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்று இரவு குறித்த விபத்து சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

கடற்படை வாகனமும், கப் ரக வாக னமும் மோதியதில் இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.இச்சம்பவத்தில் சம்பூர் கடற்படை முகாமில் கடமை புரியும் 49 வயதுடைய கடற்படை வீரர் உயிரிழந் துள்ளார்.

அத்தோடு மற்றைய வாகனத்தில் பய ணித்த மற்றும் ஒருவர் படுகாயம் அடைந்து ஈச்சிலம்பற்று வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச் சைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

உயிரிழந்த அடிப்படை வீரரின் சட லம் ஈச்சிலம்பற்று பிரதேச வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளது.சம்ப வம் தொடர்பிலான மேலதிக விசார ணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

## வடக்கு தமிழ் கட்சிகளை ஐக்கியப்படுத்த முயற்சி!

### தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அறிவிப்பு

மன்னார், நவ. 17

எதிர்வரும் நாள்களில் தமிழ்த் தேசி யக் கட்சிகளை ஐக்கியப்படுத்தும் முயற் சியில் ஈடுபடவுள்ளதாக தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கம் அறிவித்திருக்கின் றது.

இது தொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் வி.எஸ். சிவகரன் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது-

தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றி ணைய வேண்டியது காலத்தின் கட்டா யம்.

கடந்த எழுபது ஆண்டு கால அரசி யல் உரிமைக்கான ஜனநாயக மற்றும் ஆயுதப் போராட்டங்களை எதிர் கொண்ட தமிழினம் பல்வேறு விதமான இழப்புகளையும், நெருக்கடிகளையும், வலிகளையும், வாழ்வியல் சுமைகளையும் எதிர்கொண்டு வருகின்றது.

ஆனால் 2009இற்கு பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு நெருக்கடிக்குள் தமிழினம் சிக்கித் தவிக்கின்றது.

காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வருப வர்கள் கட்டமைக்கப்பட்ட இன அழிப் பைத் தொடர்ச்சியாக வன்வலு கடந்த மென் வலுவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதனை எதிர்கொள்வதே பாரிய சவாலாக உள்ளது.

அதிலும் பிரிந்து நின்று எதிர்கொள் வது என்பது சாத்தியமில்லாத ஒன்று.

ஆகவே ஒன்றாக இணைந்து அரசின் நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தமிழ்க் கட்சிகளின் பதவிச் சண்டையால் தங்களுக்குள் முரண்பட்டு, பல அணிகளாகப் பிரிவடைந்துள்ளனர். அவர்களுக்கு இடையிலான முரண்பாடு பொது எதிரியை மகிழ்விக்கும். இந்தத் தேர்தலில் கூட தமிழ்க் கட்சிகள் தமது முரண்பாட்டையே பேசு பொருளாக்கின. இதனால் வெறுப்படைந்த பொது மக்கள் தமிழ்த் தேசியக் கோட்பாட்டுச் சித்தாந்தத்திற்கு எதிராக வாக்களித்துள் ளனர்.

தமிழ்க் கட்சிகளிலும் பல்வேறு வித மான தவறுகளும், குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவற்றை அவர்கள் விரைவில் தீர்த்துக்கொள்ள வேண்டும்.

ஒரே இலக்கில் செயற்பட முனை வோர்கள் பிரிந்திருந்ததனால் வடக்கு மாகாண தேர்தல் களம் பல்வேறு வித மான சோதனைகளை ஏற்படுத்தியிருக் கின்றது. கிழக்கு மக்கள் விழித்துக் கொண்டமையால் தம்மைத் தற்காத்துக் கொண்டனர்.

அவர்களுக்கு எமது பாராட்டுக்க ளும், வாழ்த்துகளும்.

ஆனால், வடக்கில் உள்ள நிலைமை மிக மோசமாகிவிட்டது. ஆளும் அரசே வெற்றி பெற்றிருப்பதனால் எமது தமிழ்த் தேசியவாத அபிலாஷைகளை எவ்வாறு பூர்த்தி செய்யப் போகின்றோம் என் கின்ற கேள்வி எழுகின்றது.

எனவே, தமிழ்த் தேசியக் கட்சிகள் தமக்குள் இருக்கின்ற பகைமையை மறந்து குறைந்தபட்சம் ஒன்றாக இணைந்து மீண்டும் கூட்டமைப்பாக இயங்க வேண் டியது காலத்தின் கட்டாயமும் நிர்ப்பந்த மும் ஆகும்.

இவ்வாறான ஐக்கியமில்லாவிட்டால் அசுர பலத்தோடு வெற்றி பெற்றுள்ள அரசை எதிர்கொள்ளக்கூடிய வலிமை தமிழர் தரப்பிடம் இல்லாமல் போய் விடும்.

ஆகவே, எதிர்காலத்தில் நடை பெறுகின்ற தேர்தல்களிலும் சரி, தமிழ்த் தேசிய உரிமை ஜனநாயகப் போராட்ட விடயங்களிலும் சரி, ஒன்றாக இணைந்து எதிர்கொள்வதே அவசியமாகும். அத னையே மக்களும் விரும்புகின்றார்கள் - என்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மாடுகள் கடத்தலில் ஈடுபட்ட வாகனம்!

## மடக்கிப்பிடித்த இளைஞர்கள்

முல்லைத்தீவு, நவ. 17

மாடுகளை கடத்திச் செல்வதற்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் வாகனமொன்றை புதுக்குடியிருப்பு இளைஞர்கள் பொலிஸில் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அண்மைக்காலமாக வளர்ப்பு மாடுகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகளவில் பதிவாகி வருகின்றன. இதனையடுத்து குறித்த கால்நடைவளர்ப்பு உரிமையாளர்களினால் பொலிஸில் முறைப்பாடும் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த பகுதியில் மாடுகளைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் வாகனத்தை பிரதேச இளைஞர்கள் நேற்றுமுன்தினம் மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்துள்ளனர்.

சந்தேகத்திற்கு இடமான வகையில் குறித்த வாகனம் நடமாடுவதை குறித்த கிராம மக்கள் அவதானித்து கடந்த சில நாட்களுக்கு முன்னர் அதனை பிடிக்க முயற்சி செய்துள்ளனர்.

எனினும், அந்த முயற்சி பலனளிக்காத நிலையில் குறித்த வாகன இலக்கத்தை கண்காணித்து வைத்திருந்தனர்.

இவ்வாறிருக்க, நேற்று முன் தினம் குறித்த வாகனம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் சென்றபோது இளைஞர்கள் ஒன்றிணைந்து அதனை மடக்கிப் பிடித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குறித்த வாகனத்தையும், சாரதியையும் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து சென்றனர். (அ)

# உள்ளூராட்சித் தேர்தலில் தனிவழி செல்லும் ஐ.தே.க.!

கொழும்பு, நவ. 17

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் யானைச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலேயே கூட்டணி அமையவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார். (அ)

# மனிதக் கழிவுகளை குளத்தில் வீச வந்த நபரால் பதற்றநிலை!

வவுனியா, நவ. 17

வவுனியா தாண்டிக்குளம் குளப்பகுதியில் மனிதக் கழிவுகளை வீசுவதற்கு வந்த நபர் ஒருவர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டதுடன் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

குறித்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

நேற்று மாலை நபர் ஒருவர் சைக்கிள் ஒன்றில் மலர்ச்சாலையில் சடலங்களில் இருந்து அகற்றப்படும் கழிவுப் பொதியுடன் தாண்டிக்குளம் குளத்துப் பகுதிக்குச் சென்றுள்ளார். இதனை தொடர்ச்சியாக அவதானித்து வந்த இளைஞர்கள் சிலர் அவரை மடக்கிப்பிடித்து நையப்புடைத்ததுடன் அந்த பகுதி கமக்காரர் அமைப்புக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு சென்ற கமக்கார அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் விடயம் தொடர்பாக வவுனியா பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவுக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குறித்த நபரை கைதுசெய்து வாகனத்தில் ஏற்றி பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர். இதற்கு மறுப்பு தெரிவித்த பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மலர்ச்சாலையின் உரிமையாளர் வரும்வரை வாகனத்தை நகரவிடமாட்டோம் எனப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் குறித்த பகுதியில் குழப்பநிலை ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு சென்ற வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி குறித்த சம்பவம் தொடர்பாக நீதியான விசாரணை செய்து குற்றவாளியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துவதாக பொதுமக்களுக்கு உறுதியளித்தார்.

இதனையடுத்து பொதுமக்கள் அந்த பகுதியில் இருந்து அகன்று சென்றனர். (அ)

# வடக்கு மக்கள் நம்பிக்கையை வென்ற தெற்கு அரசியல் கட்சி!

## ஐக்கிய தேசியக் கட்சி பாராட்டு

கொழும்பு, நவ. 17

**நடைபெற்ற முடிந்த தேர்தல் மூலம் தெற்கு அரசியல் கட்சி ஒன்று வடக்கின் நம்பிக்கையை வெற்றி கொண்டுள்ளமை தொடர்பில் எமது பாராட்டை தெரிவித்துக்கொள்கிறோம் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

காலியில் அமைந்துள்ள ஐக்கிய தேசிய கட்சி காரியாலயத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கம் வரலாற்று வெற்றியை பெற்றுள்ளது.

அது தொடர்பில் நாங்கள் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோன்று இது இலங்கைக்கு விசேட சந்தர்ப்பமாகும்.

இலங்கை வரலாற்றில் ஒரு போதும் எமக்கு நிறைவேற்றிக் கொள்ள முடியாமல்போன விடயமொன்றை தற்போதைய ஜனாதிபதியும் அதிகாரத்துக்கு வந்துள்ள அரசாங்கமும் வென்றுள்ளன. அது தொடர்பில் இலங்கையர்கள் என்றவகையில் நாங்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்.

உதாரணமாக சுதந்திரத்துக்கு பின்னர் டி.எஸ்.சேனாநாயக்கவுக்கு பின்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ்த் தலைவர்கள் அமைச்சரவையில் பிரதிநிதித்துத்துவப்படுத்தினாலும் அந்த பிரதிநிதித்துவப்படுத்திய அமைச்சரவையில் தமிழ்த் தலைவர்கள் அவர்களுக்குரிய கட்சிகளில் வெற்றி பெற்று பிரதிநிதித்துவம் செய்தே வந்தனர். அதாவது கடந்த அரசாங்கத்தில் டக்ளஸ் தேவானந்தா அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் செய்தாலும் தெற்கு அரசியல் கட்சி ஒன்றைப் பிரதிநித்துவப்படுத்தி அமைச்சரவையில் செயற்படவில்லை. அதனால்தான் இது விசேட சந்தர்ப்பம் என தெரிவித்தேன்.

தெற்கு அரசியல் கட்சி ஒன்றை பிரதிநிதித்துவம் செய்து வடக்கு, கிழக்கில் பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு சக்திகளுடன் செயற்பட்டு வரும்போது தெற்கில் ஒரு அரசியல் கட்சி தொடர்பில் வடக்கு மக்கள் நம்பிக்கை வைத்து அது விசேட வெற்றி பெற்றுள்ளது.

அதனை இலங்கையர்களாக பெற்றுக்கொண்ட வெற்றியாகவே நாங்கள் பார்க்கிறோம். எவ்வாறு இருந்தாலும் ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்துக்கு பெரும் எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. அதனை நிறைவேற்ற முடியாது என தற்போது அவர்களுக்கு தெரிவிக்க முடியாது. தேர்தலை வெற்றி கொண்டாலும் மக்களுக்கு நிறைவேற்ற வேண்டிய பல சவால்கள் இருக்கின்றன. அதனை வெற்றி கொள்வதற்கு முடியாமல் போகும் என்றே நாங்கள் தொடர்ந்து தெரிவித்து வந்துள்ளோம்.

அது நாங்கள் பின்பற்றும் பொருளாதார நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே தெரிவிக்கிறோம் - என்றார். (அ)

# பெரும்பான்மை பெற்ற அநுரவுக்கு பாக். பிரதமர் செஷபாஸ் வாழ்த்து!

கொழும்பு, நவ. 17

பாராளுமன்றத் தேர்தலில் தனிப் பெரும்பான்மையைப் பெற்றுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு பாகிஸ்தான் பிரதமர் செஷ பாஸ் ஷெரீப் வாழ்த்து தெரிவித்துள்ளார். தனது எக்ஸ் பக்கத்தில் வாழ்த்துக்களைப் பதிவிட்டுள்ள அவர், ஜனாதிபதியின் தலைமைத்துவம் மற்றும் அவரது தொலை நோக்கு பார்வை என்பவற்றின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை இந்த தேர்தலினூடாக வெளிப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான தங்களது நெருக்கமான நீண்ட கால உறவுகளை மேலும் விரிவுபடுத்துவதற்குப் பாகிஸ்தான் உறுதியாகவுள்ளதாகவும் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்துள்ளார். (அ)

# 1,650 மில்லியன் ரூபா பெறுமதியான ஹெரோயின் கடற்படையால் மீட்பு!

## படகுடன் ஆறு பேர் கைது

கொழும்பு, நவ. 17

இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட ரோந்து நடவடிக்கையின்போது, 1,650 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடற்படையினரால் இலங்கையின் மேற்கு திசையின் ஆழ்கடலில் கடந்த 14 ஆம் திகதி அதிகாலை இந்த ரோத்து நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போதுபோது, 1650 மில்லியன் ரூபாய் பெறுமதியான ஹெரோயின் படகொன்றிலிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, சம்பவம் தொடர்பாக 6 பேர் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபர்கள் ஹெரோயின் கடத்தலுக்கு பயன்படுத்திய பல நாள் மீன்பிடிப் படகுடன் காலி துறைமுகத்துக்கு அழைத்து வரப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த படகு காலி துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டு சோதனை செய்யப்பட்டபோது, 66 கிலோ 840 கிராம் ஹொரோயின் கண்டெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 18-34 வயதுக்கு உட்பட்ட மிரிஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

கைப்பற்றப்பட்ட படகு போதைப்பொருளுடன் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாண்டில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் 17 483 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ)

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, நவ. 17

2024 பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

10 ஆவது பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள 196 பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய விசேட வர்த்தமானியே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது.

1981 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்துக்கமைய, இந்த அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை தங்களது கட்சியின் சார்பில் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்படவுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கட்சிகள் அறிவிக்க வேண்டும்.

அதன் பின்னர் 29 தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி, தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.